மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## DIRECTORATE OF DISTANCE AND CONTINUING EDUCATION

# பணிவாய்ப்பும் தமிழும்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி– 627 012.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

**தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்.**

| Learning Objectives | |
|---|---|
| The Main Objectives of this Course are to :<br>• **ஆய்வு மாணவர்களுக்குப் பயன் தரும் வகையிலும் நேர்முகத் தேர்விற்கு செல்லும் மாணவர்களுக்கும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் அமைவதை நோக்கமாக கொண்டுள்ளது.**<br>• **தமிழ் இலக்கிய இலக்கண வரலாற்றையும் வளர்ச்சியையும் அறிவர்**<br>• **தமிழ்மொழியிலுள்ள புகழ்பெற்ற நூல்களையும் நூலாசிரியர்களையும் விருது பெற்ற படைப்புகளையும் அறிந்திருப்பர். பல துறைகளில் பணி வாய்ப்பும் ஏற்படும்.** | |


| பாடஎண் | பாடங்கள் | பக்கஎண் |
|---|---|---|
| 1 | இயல் 1<br>அரசுப் போட்டித் தேர்வுகளும் தேர்வுமுகமைகளும் | 1-31 |
| 2 | இயல் 2<br>பணிப்பொறுப்புகளும் போட்டித் தேர்வுகளும் | 32-42 |
| 3 | இயல் - 3<br>போட்டித் தேர்வுகளும் விண்ணப்பிக்கும் முறைகளும் | 43-49 |
| 4 | இயல் 4<br>போட்டித் தேர்வுகளில் தமிழ் | 50-67 |
| 5 | இயல் 5<br>போட்டித் தேர்வுகளும் பயிற்சிமையங்களும்<br>வினாத்தாள் அமைப்புமுறைகளும் விடையளிக்கும் முறைகளும் | 68-84 |

## பணிவாய்ப்பும் தமிழும்

| Unit | Details |
|---|---|
| **I** | **அரசுப் போட்டித்தேர்வுகளும் தேர்வுமுகமைகளும்**<br>அரசுகளும் வேலைவாய்ப்பும் - வேலைவாய்ப்பும் வேலைவாய்ப்புஅலுவலகங்களும் - குடிமைப் பணிகள்<br>**(i). மத்தியஅரசுமுகமைகள்:**ஒன்றியஅரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) – மத்தியஅரசுப் பணியாளர் தேர்வாணையம் (SSC) - இரயில்வேபணியாளர் தேர்வுவாரியம் (RRB) –அரசுத் தேர்வுகள் இயக்ககம் (DGE)–தேசியப் பணியாளர் தேர்வுமுகமை (CET) –தேசியத்தேர்வுமுகமை (NTA) – வங்கிப் பணியாளர் தேர்வுநிறுவனம் (IBPS) – மண்டல இராணுவஆள் தேர்வுமையங்கள் - இந்தியத் துணை இராணுவப் படைகளுக்கானதேர்வுகள் (AR, CRPF, BSF, ITBP, CISF, SFF, RAF, RPF, SSB, NSG, SPG) - இதரத் தேர்வுமுகமைகள்<br>**(ii) மாநிலஅரசுமுகமைகள்:** தமிழ்நாடுஅரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) - இதரத் தேர்வுமுகமைகள். |
| II | **பணிப்பொறுப்புகளும் போட்டித் தேர்வுகளும்**<br>**(i)** **மத்தியஅரசுப் பணிப்பொறுப்புகள் (அரசு,பொதுத்துறை,தனியார் நிறுவனங்கள்).**<br>**(ii)** **மாநிலஅரசுப் பணிப்பொறுப்புகள் (அரசு,பொதுத்துறை,தனியார் நிறுவனங்கள்).** |
| III | **போட்டித் தேர்வுகளும் விண்ணப்பிக்கும் முறைகளும்**<br>**தேர்வுகளின் வகைகள் (உடல்தகுதி,எழுத்துத்தேர்வு,முதல்நிலை,முதன்மை),நேர்முகத்தேர்வு–விளையாட்டுத் திறனும் பணிவாய்ப்பும்**<br>(I). பணித் தேர்வுகள் (TNPSC, UPSC, TRB, CET, TNUSRB)<br>(II). தகுதித் தேர்வுகள் - ஆசிரியர் தகுதித் தேர்வுகள் (NET, SET, CTET, TET) மொழிப்புலமைசார் தகுதித்தேர்வுகள் (IELTS, GRE, ACT, GMAT, TOEFL, |

| | |
|---|---|
| | SAT, Duolingo)<br>(III). நுழைவுத் தேர்வுகள் (CUET, TANCET / CEETA, JEEE, NEET).<br>(IV). ஊக்கத்தொகைத் தேர்வுகள் (JRF, SRF, CSIR, NTSE, NMMS, TRUST) |

| | |
|---|---|
| IV | **போட்டித் தேர்வுகளில் தமிழ்**<br>போட்டித் தேர்வுகளுக்கானபாடத்திட்டம் அறிமுகம் - தேர்வுமுகமைகளும் அவற்றால் வரையறுக்கப்பட்டதமிழுக்கானபாடத்திட்டங்களும் - TNPSC (Group-I, Group-II, Group-III, Group-IV). TRB (UG,PG) – NET, SET, TET போன்றதேர்வுகளின் தமிழ்ப் பாடத்திட்டங்கள். |
| V | **போட்டித் தேர்வுகளும் பயிற்சிமையங்களும்**<br>வினாத்தாள் அமைப்புமுறைகளும் விடையளிக்கும் முறைகளும் - கணினி, இணையத்தின்வழிதேர்வு–மாதிரிவினாத்தாள் - நேர்காணல் - மாதிரிதேர்வுகள் - அகில இந்தியகுடிமைப்பணித் தேர்வுப் பயிற்சிமையம் - பிறதேர்வுமையங்களும் பயிற்சியும் - ‘நோக்கம்’செயலி (App) –பிறசெயலிகள் - பயிற்சித் தேர்வுகள் (Practice / MOCK Test). |
| **Text Books** | |
| **நீங்களும் ஓர் IPS அதிகாரிஆகலாம் - பி.சைலேந்திரபாபு,சுறாபதிப்பகம் சென்னை.** | |
| **ஐஏஎஸ் தேர்வும் அணுகுமுறையும் - வெ.இறையன்பு,நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ்,சென்னை.** | |

## இயல் 1

## அரசுப் போட்டித் தேர்வுகளும்தேர்வு முகமைகளும்

## அரசும் வேலை வாய்ப்பும்

அரசு வேலை அற்புத வேலை. எல்லோருக்கும் அரசுப் பணிக்குச் செல்ல வேண்டும் என்கிற கனவு உண்டு.'கால் காசாக இருந்தாலும் அரண்மனைக் காசாக இருக்க வேண்டும்' என்ற எண்ணம் மக்களிடையே இருப்பதைக் காணலாம். பணிபாதுகாப்பு, அரசு சலுகைகள், குறிப்பிட்ட வயதுவரை நிரந்தர வருமானம் இவற்றின் காரணமாக அரசாங்க வேலைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.எப்படி அதை நனவாக்குவது என்பதுதான் தெரியவில்லை.

### தேடல் வேண்டும்

அரசுப் பணிகளுக்குச் செல்ல வேண்டும் என்கிற தாகம் வேண்டும்.பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த நாளிலிருந்தே அரசுப் பணிகள் தொடர்பான அறிவிப்புகளை உற்றுக் கவனிக்க வேண்டும்.

நம்மால் முடியுமா? எனும் ஐயத்தை நமக்குள்ளிருந்து நீக்க வேண்டும். நாம் எப்பணிக்குச் செல்ல விரும்புகிறோமோ அப்பணிக்கு உதவி செய்வதற்கான திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

சான்றாக, மக்கள் தொடர்பு அலுவலர் (Public Relations officer) பணிக்குச் செல்ல விரும்பினால் மக்கள் தொடர்புக் கலையை வளர்த்துக்கொள்ள வேண்டும். மற்றவர்களோடு தயக்கமில்லாமல் பேசுவது, அரசு நிகழ்ச்சிகளை, அரசுத் திட்டங்களை எவ்வாறு செய்தியறிக்கையாக மாற்றுவது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**மென்திறன்களை வளர்த்துக்கொள்ளவேண்டும்**

ஊடகவியலாளர்களோடு நட்போடு இருப்பது, செய்திகளைச் சமூக ஊடகங்களில் வெளியிடுவது, அவற்றை முறையாகக் கோப்புகளில் ஆவணப் படுத்துவது, வரவேற்புரை தொடங்கி நன்றியுரை வரை அழகாகத்தயாரிப்பது, நிகழ்ச்சியை நேர்த்தியாகத் தொகுத்தளிப்பது. கூட்டத்தைநேர்த்தியாகக் கூட்டுவது, இவையெல்லாம் திறன்கள். கல்லூரிகள் தரும் ஏட்டுக் கல்வியோடு இத் திறன்களை வளர்க்கும் செய்முறைக் கல்வியையும் கல்லூரிக் காலகட்டத்திலிருந்தே வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**மொழியாற்றல்**

தாய் மொழியில் பிழையில்லாமல் எழுதவும் பேசவும் தெரிந்திருக்கவேண்டும். தினமும் செய்தித்தாள்களையும், சமூக ஊடகப் போக்குகளையும் கவனிக்க வேண்டும். கல்லூரி நாட்களில் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறைகள், பேச்சுப் பயிற்சி முகாம்களில் பங்கேற்று மேடையச்சத்தை முற்றிலுமாக விட்டுவிட வேண்டும்.

நேர்த்தியான உடல் மொழியும் மரியாதை ஏற்படுத்தும் ஆடைத்தெரிவும்கூட வேலை பெறுவதற்குப் பேருதவி செய்யும். நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளை நுட்பமாக உள்வாங்குவதன் மூலமாகப் பொது அறிவைத் தெளிவாகக் கற்க முடியும். பொது அறிவுத் திறனை நாம் பெற்றுவிட்டால், நம்மால் அரசுப் பணியைப் பெற்றுவிட முடியும்.

**மென்திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்**

அரசுப் பணி பொறுப்பான பணி. பொதுமக்களுக்குச் சேவைசெய்யும் பணி. எனவே, அவர்களின் மனநிலையைப் புரிந்துகொள்ளும் உளவியல் திறன் மிகவும் அவசியம். குழுவாகச் செயல்பட்டு வெற்றியை ஈட்டுதல், மற்றவர்களின் திறன்களைச் சரியாகக் கண்டறிந்து ஊக்கப்படுத்துதல், நவீன தொழில்நுட்ப சாதனங்களைச் சரியாகக் கையாளுதல், பணிப் பண்பாட்டோடு பணிபுரிதல், தலைமைப் பண்பை வளர்த்துக்கொண்டு எல்லோரையும் அரவணைத்துச் செல்லுதல் ஆகியன மென் திறனோடு தொடர்புடைய உயர் நெறிகள், அரசுப் பணிக்குச் செல்லக்கூடியவர்கள்

வளர்த்துக்கொள்ள வேண்டிய திறன்கள். பரவலாக ஆங்காங்கே தேங்கிக்கிடக்கும் மனித வளத்தை ஒரு புள்ளியில் குவிக்க மென்திறன் பயிற்சி அவசியம்.

**வேலைவாய்ப்பும் வேலைவாய்ப்பு அலுவலகங்களும்**

சாப்பாட்டைத் தள்ளிப்போடலாம். ஆனால் வேலை தேடுவதைத்தள்ளிப் போடக்கூடாது. வேலை செய்யும் கரங்களில் எப்போதும் செழிப்பிருக்கும். என் கடன் பணி செய்து கிடப்பதே என்று உற்சாகமாய் உழைப்போர், வாழ்வில் பெரும் உயரத்திற்குப் போய்விடுகின்றனர். எந்த வேலை கிடைத்தாலும் பார்ப்பேன் என்பவர்கள், ஒரு புறம் இந்த வேலை செய்ய நான் தகுதி பெற்றிருக்கிறேன், இது என் கனவு வேலை என்று எண்ணி அதை நோக்கி இயங்குவோர் மறுபுறம். இரு சாரருக்கும் வேலை கிடைக்கிறது. ஆனால் கனவு வேலையை அடைந்தோர் அடுத்தடுத்து முயன்று புதிய தடம் பதிக்கிறார்கள்.

**வேலைவாய்ப்பை எங்கே தேடுவது?**

நாம் தேடும் வேலை, நம்மைத் தேடிக்கொண்டிருக்கிறது என்பதேஉண்மை. "நீங்கள் விரும்பும் வேலையைத் தேர்ந்தெடுங்கள், உங்கள் வாழ்க்கையில் ஒரு நாளும் நீங்கள் வேலை செய்யவேண்டியதில்லை"என்கிறார் அறிஞர் கன்பூசியஸ், அரசுப் பணியோ, தனியார்ப் பணியோ எந்தப் பணி என்றாலும் அந்தப் பணியை விருப்பத்துடன் செய்தால் வெற்றி நிச்சயம். நம் உயரிய பார்வை, தேர்ந்த கவனம், கனிவான பேச்சு ஆகியவற்றால் வேலை செய்யுமிடத்தை நம்மால் சொர்க்கமாக்க முடியும். நம் வாழ்வு குறித்த கனவுகள் மிக முக்கியமானவை. அக்கனவுகளே நம்மை அடுத்தடுத்த இலக்குகளை நோக்கி நகர்த்துகின்றன.

"உங்களால் பறக்க முடியாவிட்டால் ஓடுங்கள், ஓட முடியாவிட்டால் நடந்துசெல்லுங்கள், நடக்க முடியாவிட்டால் ஊர்ந்துசெல்லுங்கள். ஆனால் எல்லா வகையிலும் நகர்ந்துகொண்டே இருங்கள்" என்று மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் குறிப்பிட்டதைப் போன்று இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும்.

**வேலைவாய்ப்பை எவ்வாறு தேடுவது?**

வேலை என்பது நம்மை இந்த உலகிற்கு நிரூபிப்பதற்கான நல்வாய்ப்பு என்பதை உணருங்கள். நீங்கள் படித்த படிப்பிற்கு ஏற்ற வேலையை முதலில் தேடுங்கள். இலக்கியம் படித்த மாணவர்களுக்குச் சமூக ஊடகங்களில் உள்ளடக்க

எழுத்தாளர்கள் (Content Writers)வாய்ப்புகள் நிறைய கிடைக்கின்றன. இலக்கியக் கல்வி, மனதிற்கு இன்பமான கல்வியாகவும் வேலை தரும் கல்வியாகவும் திகழ்கிறது.

மொழியை நேர்த்தியாக எழுதவும் பேசவும் தெரிந்தால் இளநிலை (தமிழ், ஆங்கிலம்) பயின்றவர்கள் பி.எட் பயின்று தமிழாசிரியர் அல்லது ஆங்கில ஆசிரியராக மாற முடிகிறது. பி.காம் பயின்றவர்கள் ICAI -The Institute of Chartered Accountants of India அமைப்பு நடத்தும் தேர்வுகளில் வெற்றி பெற்றால் பட்டயக் கணக்கராகப் பணி செய்ய முடிகிறது.

காட்சித் தொடர்பியல் பயின்ற மாணவர்கள் ஊடகத்துறையில்சாதிக்க முடிகிறது. எம்.ஏ.(தமிழ்) பயின்று முனைவர் பட்டம் பெற்ற தமிழ்ப் பேராசிரியர்களுக்கு உலக நாடுகளில் உள்ள தமிழ்ப் பள்ளிகள்,கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பணி வாய்ப்புகள் காத்திருக்கின்றன.

சைபர் குற்றங்கள் பெருகிவிட்ட நடப்பு நாளில் குற்றவியல் படிப்புபயின்றவர்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கின்றன. பி.எஸ்சி. (உளவியல்) பயின்ற மாணவர்களுக்குப் பள்ளி, கல்லூரிகள், ஐ.டி. நிறுவனங்கள் போன்றவற்றில் பணி வாய்ப்புகள் கிடைக்கின்றன.

“வேலையில் உள்ள மகிழ்ச்சி, வேலையை முழுமையாக்குகிறது”என்றார் அறிஞர் அரிஸ்டாட்டில். பட்டப்படிப்பைத் தேர்வுசெய்வதற்கு முன்பே இன்று எப்படிப்பிற்கு உடனே வேலை கிடைக்கிறது? அதை எங்கே பயில்வது சிறப்பு என்று ஆராய்ந்து சரியான நிறுவனத்தில் சேர்ந்து பயின்றால் நாம் விரும்பிய பணியை நம்மால் உடனே பெற முடியும்.

நம் கனவுகளை நாம் நனவாக்க முயலாவிட்டால் வேறு யார்கனவையாவது நனவாக்க நாம் உழைக்க வேண்டியதாகிவிடும்.

**வேலைவாய்ப்பு அலுவலகங்கள்**

பள்ளி, கல்லூரிப் படிப்பை முடித்தவர்களுக்குப் பயிற்சி தரவும்அவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தர உதவுவதற்கும் தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையை ஏற்படுத்தி உதவி வருகிறது.

**வேலை நிலவரத் தகவல்கள்**

தமிழ்நாடு முழுக்க உருவாகும் பல்வேறு வேலைகளின் அமைப்பு,அவ்வேலைகளைச் செய்யப் பணியாளர்களை ஒவ்வொரு நிறுவனமும்

தேர்ந்தெடுக்கும் முறை, வேலை நாடுநர்களுக்கான கல்வி மற்றும் பிற தகுதிகள், மனித வளங்கள் ஆகியவற்றை ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை தொகுத்து வழங்குகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள அரசு மற்றும் தனியார்நிறுவனங்கள் குறித்த விபரங்கள், அவர்கள் வேலை தர வகுக்கும் நெறிமுறைகளை இவ்வலுவலகங்கள் தொகுத்துத் தருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்தின் தனிச் சிறப்பு, அங்கே உள்ள உயரியமனிதவளம் ஆகியவற்றை இத்துறை தொகுத்துத் தருகிறது.

வேலை நிலவரத் தகவல் பிரிவில் கிடைத்த தகவல்களின்அடிப்படையில் மனித வளத் தேவையினைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்திற்குத் திட்டமிடுவது. அந்தந்த மாவட்ட வளர்ச்சிக்காகத் திட்டமிடும்போது தொழில்நுட்ப வல்லுநர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், அறிவியல் அறிஞர்கள் ஆகியோரை உருவாக்கும் செயல திட்டம் வகுப்பது, அதைச் செயல்படுத்துவது ஆகியன நோக்கமாகும்.

**வேலை நாடுநர் பதிவு**

தமிழ்நாடரசு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்tnvelaivaaippu gov.in எனும் இணைய தளத்தில் அரசு மற்றும் தனியார்த் துறையில் பணி செய்ய விரும்பும் வேலை நாடுநர் குறித்த விபரங்களைத் தொகுக்கிறது.

பயனர் அடையாளச் சொல், கடவுச் சொல் மூலம் அவர்களின் கல்வித் தகுதி,பிற தொழில்நுட்பத் திறன் தகுதிகளைப் பதிவுசெய்கிறது. அவர்களுக்கு அத்துறை திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கிறது.

**வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள்**

- வேலைவாய்ப்புக்குப் பதிவு செய்தல் மற்றும் பதிவைப் புதுப்பித்தல்.
- வேலை நாடுநர்கள் மற்றும் மாணவர்களுக்குத் தொழில் நெறி வழிகாட்டல்.

**வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துதல்**

- மெய்நிகர் கற்றல் இணைய தளத்தின் வாயிலாகப் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் இளையோருக்கு இணைய வழி பாடக் குறிப்புகள் வழங்குதல்.
- திறன் பயிற்சி மற்றும் அயல் நாட்டு வேலை வாய்ப்பிற்குஆலோசனைகள் வழங்குதல்.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகள் குறித்தவிழிப்புணர்வுப் பயிற்சியை இத்துறை அளிக்கிறது.

**தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம்**

அரசுப் பணிகளுக்கு மட்டுமல்லாமல், தனியார்த் துறை வேலைவாய்ப்புகளுக்கும் வேலை நாடுநரை ஆயத்தப்படுத்தும் பொருட்டு,தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையத்தை (Tamil Nadu Private Job Portal) ஏற்படுத்தியுள்ளது.

இவ்விணையம் வேலை தரும் தனியார் தொழில் நிறுவனத்தையும்வேலை தேடும் வேலை நாடுநரையும் இணையம் மூலம் இணைக்கிறது.

42 பிரிவுகளைச் சார்ந்த 7230 தனியார் தொழில் நிறுவனங்கள் இவ்விணையத்தில் இணைந்துள்ளன.

172,071 காலிப் பணி வாய்ப்புகள் பதிவிடப்பட்டுள்ளன.

312,862 வேலை நாடுநர்கள் இத்தளத்தில் பதிவுசெய்து காத்துக்கொண்டுள்ளனர். 29,565 பேருக்கு இதுவரை வேலை கிடைத்துள்ளது.

**எவ்வாறு பதிவு செய்வது?**

தனியார்த் துறையில் வேலை பெற விரும்புவோர்tnprivatejobs.tn.gov.in எனும் தளத்தில் தங்கள் கல்வித் தகுதி மற்றும் உரிய ஆவணங்களோடு பதிவு செய்துகொள்ளலாம்.

**தொழில் நெறி வழிகாட்டல்**

employmentex change.tn.gov.in எனும் இணைய தளத்தின் மூலம் தமிழ் நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை தொழில் நெறித்தகவல்களை வழங்குகிறது.

**தொழில் வழிகாட்டி ஆலோசகர்(Vocational Counsellor)**

BSC உளவியல் பயின்று பள்ளி, கல்லூரிகளில் 16000 - 58000 ஊதியத்திற்கு தொழில் வழிகாட்டி ஆலோசகராக எவ்வாறு பணி புரிவது? என்று துறை தெளிவுபடுத்துகிறது.

திறன் தமிழகம் எனும் காலாண்டிதழ் மூலம் மாநிலமெங்கும்நடைபெறும் வேலைவாய்ப்பு சார்ந்த நிகழ்ச்சிகளை மாணவர்களுக்குத் தெரிவிக்கிறது.

**தொடர்புகொள்ள**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகம், ஆலந்தூர்சாலை, திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை - 600 032

## அரசுப் போட்டித் தேர்வுகளும் தேர்வு முகமைகளும்

மனிதன் தன் சொந்த நிழலில் நின்றுகொண்டே ஏன் இருட்டாகஇருக்கிறது? என்று கேட்கிறது ஒரு ஜென் பழமொழி. இரண்டு சூரியன்களை இமைக்குள்ளே இருத்திக்கொண்டு இருளில் இருப்பதாய் இனியும் ஏன் சொல்ல வேண்டும்? பறக்கத் தயாராக இருப்பவருக்குச் சிறகுகள் தானே முளைக்கும், நடக்கத் தயாராக இருப்பவருக்குப் பாதைகள் தானே திறக்கும் என்கிறார்கள் வெற்றிபெற்றவர்கள்.

மலையில் பொழியும் மழை காட்டாற்று வெள்ளமாய் ஓடி அருவியாய் விழுந்து தன் பாதையைத் தானே உருவாக்கி, நதியாய் ஆர்ப்பரித்துக் கடலை அடைவதில்லையா? இயற்கை இப்படி உற்சாகமாய் இருக்க, நாம் மட்டும் ஏன்? நடக்காது... முடியாது, என்னால் இயலாது! என்று பேசுகிறோம்? ‘அரைக்காசு வேலை என்றாலும் அரசாங்க வேலை’ என்று கிராமப்புறங்களில் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம்.

அரசுப் பணி கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! என்கிறஆவல் ஒவ்வொருவருக்குள்ளும் உண்டு. மத்திய அரசுப் பணி, மாநில அரசுப் பணி என்று பல்வேறு வகையான பணி வாய்ப்புகள் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு உள்ளது. அதைத் தெரிந்துகொள்ள முயன்றால் நம்மாலும் சாதிக்க முடியும்.

**மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

மத்திய, மாநில அரசுப் பணிகள் முறையான தேர்வுகள் மூலமேநிரப்பப்படுகின்றன. நாடெங்கும் ஒவ்வோர் ஆண்டும் பணி நிறைவு பெறக் கூடிய பணியாளர்களின் எண்ணிக்கையை மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் சேகரித்து, அதற்கான தேர்வு அட்டவணைகளை ஓராண்டிற்கு முன்பாகவே வெளியிட்டு, எம்ப்ளாய்மென்ட் நியூஸ் போன்ற இதழ்களில் அறிவிப்பு செய்கிறது. அதை மாணவர்கள் தொடர்ந்து கவனித்து வந்தால் முன்னதாகவே அத்தேர்வுகளுக்கு ஆயத்தமாகலாம்.

**இந்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்**
**(Staff Selection Commission)**

45 ஆண்டுகளுக்கு முன்னால் (4.11.1975) உருவாக்கப்பட்ட மத்தியஅரசின் தேர்வாணையமே மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம். இதன் தலைமையகம் புது டெல்லியில் உள்ளது. ஒரு தலைவரும் இரு செயலாளர்களும் இதை நிர்வாகம் செய்கிறார்கள். மத்திய அரசின் B மற்றும் C பணியிடங்களுக்கு இத்தேர்வாணையம் தேர்வு நடத்திப் பணியாளர்களைத் தேர்வு செய்கிறது. www.ssc.nic.in என்பது மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணயத்தின் இணையதள முகவரி.

**எவ்வாறு உள் நுழைவது?**

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைய இணையதள முகவரியைத்தேடுபொறிகளில் தேடினால் ssc.nic.in தளத்தை அடையலாம். உள்ளே நுழைய பயனர் பெயராக (UserName) நீங்கள் எந்தத் தேர்வு எழுதுகிறீர்களோ அதன் பதிவெண்ணைத் தட்டச்சு செய்தால் அடுத்து கடவுச் சொல் (Password) கேட்கிறது. SSC Registration Password எனும் கடவுச் சொல்லைத் தந்தவுடன் இந்த இணையதளத்திற்குள் நுழைய முடிகிறது.

**புதிய இணையதளம்**

இந்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு ஏற்கெனவேஇருக்கும் இணைய தளத்தோடு (ssc.nic.in) 17.02.2024 முதல் ssc.gov.in எனும் புதிய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

+2 முடித்த, வேலை தேடும் மாணவர்கள் இப்புதிய இணையதளத்தில் OTR (One Time Registration) எனும் ஒரு முறை பதிவைப் பதிவு செய்துகொண்டால் இந்திய அரசுப் பணியாளர் தேர்வாணைய அறிவிப்புகளை முறையாக அறிந்துகொள்ள முடியும்.

**என்ன கல்வித் தகுதி?**

மத்திய அரசுப் பணி என்றவுடன் பட்டப்படிப்பு முக்கியம் என்று எண்ண வேண்டியதில்லை.

சில பணிகளுக்கு +2 படிப்பு போதுமானது.

+2 படிப்பு படித்தவர்களுக்கு இத்தேர்வாணையம் போட்டித்தேர்வுகளை நடத்துகிறது. Combined Higher Secondary Level (10+2) Examinationஎன்று அதைத் தேர்வாணையம் அழைக்கிறது.

ஆங்கிலத்தில் உயர் வேகத்துடன் தட்டச்சு செய்யத் தெரிந்தவர்களுக்கும் Stenography Skill Test எனும் சுருக்கெழுத்தாளர் திறன் தேர்வும் முடித்து வெற்றிபெற்றிருந்தால் மத்திய அரசின் அலுவலகப் பணிகளுக்கு எளிதில் நுழைய முடியும்.

இத்தேர்வாணையம் மத்திய அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரிவோருக்கு ஒவ்வோர் ஆண்டும் Ammual Departmental Typewriting Skill Testஎனும் தட்டச்சுத் தகுதித் தேர்வையும் Annual Departmental Senograpy Skill Testஎனும் சுருக்கெழுத்துத் தகுதித் திறன் தேர்வையும் நடத்துகிறது. இரு திறன்களும் இல்லாமல் பணிக்குச் சேரும் பணியாளர், இந்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் திறன் வளர்க்கும் தேர்வுகளில் பங்கேற்றுத் தேர்ச்சிபெற்று பணி உயர்வும் பெறலாம்.

மத்தியப் பணியாளர்கள், பொதுமக்கள் குறைகள் மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தின் கீழ் இத்தேர்வாணையம் செயல்படுகிறது.

## தமிழ்நாடு அரசுத் தேர்வு முகமைகள்

தமிழ்நாடு அரசின் பணியாளர்களைத் தேர்வுசெய்யும் பணியாளர்தேர்வாணைய மே Tamil Nadu Pubic Service Commission என்று அழைக்கப்படுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (1) ஆவது பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள இத்தேர்வாணையம்,

1. மாநில அரசின் பல்வேறு துறைகளுக்குரிய பணியாளர்களைப்போட்டித் தேர்வின் மூலம் தேர்வு செய்கிறது.
2. நேர்காணல்கள் மூலம் நேரடி நியமனங்கள் செய்கிறது.
3. உயர் அலுவலர்களின் பதவி உயர்வு, மாற்றுப் பணிஆகியவற்றிற்கான தேர்வுகளை நடத்துகிறது
4. பணி நியமனத்திற்கான விதிமுறைகளை வகுத்துச்செயல்படுத்துகிறது.
5. பல்வேறு பணியிடங்களின் ஒழுங்கு நடவடிக்கையைமேற்கொள்கிறது
6. பணியாளர் தேர்வு தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

**பணிகள்**

❖ எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் வடிவிலமைந்த நேர்முகத் தேர்வுஆகியவற்றை உள்ளடக்கிய தேர்வுகளை வடிவமைத்து நடத்துகிறது.

- ❖ விண்ணப்பதாரர்களின் சான்றிதழ்களைச் சரிபார்த்து உண்மைத்தன்மையை ஆராய்கிறது.
- ❖ தேர்வுகளில் வெற்றி பெற்றோருக்குப் பணி நியமன ஆணைகளைவழங்குகிறது.
- ❖ 2005ஆம் ஆண்டிற்கான தகவல் அறியும் உரிமைச் சட்டப்படிகேட்கப்படும் வினாக்களுக்குப் பதில் அனுப்புகிறது.
- ❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவிலிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உரிய பதில் அளிக்கிறது.

**ஆண்டுத் திட்டம்**

tnpsc.gov.in எனும் இணைய தளத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்தேர்வாணையம் Group - 1 முதல் Group- 4 வரையிலான தேர்வுகளுக்கான ஆண்டுத் திட்டத்தை வெளியிடுகிறது.

**அமைப்பு**

1929 இல் சென்னை மாகாண சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டஒரு சட்டத்தின் மூலம் ஒரு தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்களைக் கொண்டு இத் தேர்வாணையம் உருவாக்கப்பட்டது.

அரசு அலுவலகங்களில் உதவியாளர் முதல் வருவாய்க் கோட்டாட்சியர், வட்டாட்சியர், நகராட்சி ஆணையாளர், துணைக் காவல் கண்காணிப்பாளர், துணை ஆட்சியர் போன்ற முதன்மைப் பணிகளுக்குத் தேவையானவர்களை இத்தேர்வாணையம் தேர்வுகள் மூலம் தேர்வு செய்து பணி நியமனம் செய்கிறது.

## Group - IV பாடத்திட்டம்

பொது அறிவியல்,நடப்பு நிகழ்வுகள், புவியியல், இந்திய, தமிழகவரலாறும் பண்பாடும், இந்திய அரசியல், இந்தியப் பொருளாதாரம்,இந்திய தேசிய இயக்கங்கள் ஆகிய தலைப்புகளோடு Aptitude and MentalAbility குறித்த வினாக்களும் அமைகின்றன.

## இரயில்வே பணியாளர் தேர்வு வாரியம்

இந்திய அரசின் மிகப்பெரிய துறை இரயில்வே துறை. 1837 இல்சென்னை செங்குன்றம் முதல் சிந்தாதிரிப்பேட்டை பாலம் வரை ஓடிய ரயில்தான் இந்தியாவின் முதல் இரயில். 1853ஆம் ஆண்டு இந்தியாவில் தொடர்வண்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

1947 இல் நம் தேசம் விடுதலை பெற்றபோது, தேசம் முழுக்க42 தொடர்வண்டி அமைப்புகள் இருந்தன. 1951 இல் அவை தேசியமயமாக்கப்பட்டன.

இந்திய ரயில்வே அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தியரயில்வே, தேசத்தை நோக்கிய உயிர்நாடி (Life line to the nation) எனும் விருது வாக்கோடு செயல்படுகிறது. காலத்திற்குத் தக்க நவீனத்தோடு மணிக்கு 180 கி.மீ. வேகத்தில் செல்லும் வந்தே பாரத் எக்ஸ்ப்ரஸ் தொடர்வண்டிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

**மொத்த தொடர்வண்டிப் பாதை**

104,647 கிலோ மீட்டர் நீள தொடர்வண்டிப் பாதையை உடையஉலகின் நான்காம் மிகப் பெரிய நிறுவனம் இந்திய இரயில்வே நிறுவனம். ஒவ்வொரு நாளும் 12,817 தொடர்வண்டிகளை இயக்கி 24 மில்லியன் இந்திய மக்களுக்கு இத்துறை தொண்டாற்றிவருகிறது.

**பணியாற்றும் ஊழியர்கள்**

31.03.2022 அன்றைய புள்ளிவிபரப்படி 1,212,882 பணியாளர்கள்இரயில்வே துறையில் பணியாற்றிவருகின்றனர்.

இந்திய இரயில்வே இந்திய அரசின் மிகப் பெரிய பொதுத் துறைநிறுவனம் என்பதால் ஓராண்டுக்கு 500 கோடி மக்கள் தொடர்வண்டிகளில் பயணிக்கின்றனர்.

**ரயில்வே துறையில் வேலை வாய்ப்புகள்**

சிக்னல் முதல் பயணச்சீட்டு வழங்குதல் வரை கணினி சார்ந்துஇந்திய ரயில்வே நவீனப்படுத்தப்பட்டாலும் மனிதர்கள் மட்டுமே செய்ய முடிந்த வேலைகளுக்குப் பஞ்சமில்லை.

**இரயில்வே ஆட்சேர்ப்புக் கட்டுப்பாட்டு வாரியம்**

www.rrcb.gov.in எனும் இணைய முகவரி மூலம் இரயில்வேஆட்சேர்ப்புக் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயல்பாடுகளை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. இரயில்வே ஆட்சேர்ப்பு தொடர்பான அறிவிப்புகளை இந்த இணைய தளத்தின் மூலமாகவே நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

**அலுவலகங்கள்**

இந்திய இரயில்வேயில் பணிபுரிய விரும்பும் பணியாளர்களைத்தெரிவுசெய்ய இந்தியா முழுதும் 21 அலுவலகங்கள் உள்ளன.

அகமதாபாத்

அஜ்மீர்

பிரயாக்ராஜ்

பெங்களூரு

போபால்

புவனேஸ்வர்

பிலாஸ்பூர்

சண்டிகர்

சென்னை

கோரக்பூர்

கவுகாத்தி

ஜம்மு காஷ்மீர்

கொல்கத்தா

மால்டா

மும்பை

முசாபர்பூர்

பாட்னா

ராஞ்சி

செகந்திராபாத்

சிலிகுரி

திருவனந்தபுரம்

ஆகிய 21 அலுவலகங்கள் மூலம் இரயில்வே ஆட்சேர்ப்பு நடைபெறுகிறது.

**அமைப்பு**

1942 ஆம் ஆண்டு அன்றைய வட மேற்கு இரயில்வேயில் துணைப்பணியாளர்களைத் தேர்வு செய்வதற்காக, ஒரு தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சர்வீஸ் கமிஷன் அமைக்கப்பட்டது. அதுவே இரயில்வே சர்வீஸ் கமிஷன் என்று அறியப்படுகிறது.

## தொழில்நுட்பக் கலைஞர்களுக்குரிய வேலை வாய்ப்புகள்

இரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் ஐ.டி.ஐ., பாலிடெக்னிக், பி.ஈ.போன்ற தொழில்நுட்பக் கல்வி பயின்றவர்களுக்கான தேர்வினைத் தனியே நடத்துகிறது. 2018ஆம் ஆண்டில் 26502 தொழில்நுட்பப் பணியாளர்கள் தேர்வுசெய்யப்பட்டனர். இரு நிலைகளில் இத்தேர்வு நடத்தப்பட்டு, அதன்பின் திறன் தேர்வும் ஆவணங்கள் சரிபார்ப்பும் உளவியல் சோதனையும் நடத்தப்படுவதுண்டு.

**RRB-JE**

இரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் இந்திய இரயில்வேயில்பணிபுரிய இளநிலைப் பொறியாளர் (JE) தகவல் தொழில் நுட்பஇளநிலைப் பொறியாளர் போன்ற பணியிடங்களுக்கு RRB – JEதேர்வை நடத்துகிறது.

**தொழில்நுட்பம் அல்லாத பணியிடத் தேர்வுகள்: (RRB - NTPC)**

இரயில்வேயில் வணிகப் பயிற்சியாளர், சரக்குக் காவலர், போக்குவரத்துப் பயிற்சியாளர், போக்குவரத்து உதவியாளர், உதவி தொடர் வண்டி நிலைய இயக்குநர் போன்ற பணியிடங்களுக்கான போட்டித் தேர்வினையும் இரயில்வே ஆட்சேர்ப்புக் கட்டுப்பாட்டு வாரியம் நடத்துகிறது. இரயில்வே ஆட்சேர்ப்புக் கட்டுப்பாட்டு வாரியம் அனைத்து தரப்பு மாணவர்களுக்கும் போட்டித் தேர்வுகளை நடத்துகிறது.

## தேசியப் பணியாளர் தேர்வு முகமை
## (National Recruiment Agency)

இந்திய அரசின் குடிமைப் பணிகள், பொதுத் துறை நிறுவனப்பணிகள், இராணுவப் பணிகள், இரயில்வே பணிகள் மற்றும் அரசுடைமை வங்களின் தொழில்நுட்பம், தொழில்நுட்பம் அல்லாத C மற்றும் D பிரிவு பணியாளர்களை இப்பணியாளர் தேர்வு முகமை தேர்வுசெய்கிறது.

**உருவாக்கப்பட்ட நோக்கம்**

பொதுத்துறை வங்கிகளுக்கான வங்கிப் பணியாளர்களைத் தேர்வுசெய்ய 1984 இல் உருவாக்கப்பட்ட வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம் மக்களவை மசோதா மூலம் கலைக்கப்பட்டது. 19.08.2020 அன்று உருவாக்கப்பட்ட தேசியப் பணியாளர் தேர்வு முகமை வங்கிப் பணியாளர் தேர்வு வாரியத்தின் பணிகளைச் செய்யத் தொடங்கியது.

**எந்தெந்தத் தேர்வுகள்?**

அரசுடைமையாக்கப்பட்ட வங்கிப் பணிகளுக்கு புரொபேஷனரிஅலுவலர் (Probationary officer), சிறப்பு அலுவலர், எழுத்தர், ஏவலர்,பாதுகாவலர் ஆகிய பணியிடங்களுக்கான பூர்வாங்கத் (Preimmary Exam)தேர்வுகளை நடத்துகிறது.

**ஒரே தேர்வு**

பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிப் பணியாளர் தேர்வுநிறுவனங்கள், இரயில்வே ஆள் சேர்ப்பு நிறுவனங்கள், இராணுவப் பணியாளர் தேர்வு நிறுவனங்கள் என்று தனித்தனியே தேர்வுகள் நடத்துவதால் ஒவ்வொன்றுக்கும் தேர்வு எழுதுவோர் விண்ணப்பிக்க வேண்டியுள்ளதால் பெரும் பொருட்செலவும் நிர்வாக நேர விரையமும் ஏற்படுகிறது.

தனித்தனியே கட்டணம் செலுத்தவேண்டியுள்ளது. தேர்வுஎழுதுவோர் நீண்ட தொலைவு பயணிக்கவேண்டியுள்ளது. தேர்வுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு உதவும் பொருட்டு 2020 இல் மத்தியஅரசால் தேசியப் பணியாளர் தேர்வு முகமை உருவாக்கப்பட்டு,மத்திய அரசின் அமைச்சரவைக் குழு ஒப்புதல் வழங்கியது.

**பொதுத் தகுதித் தேர்வு**

C மற்றும் D தொகுதிப் பணியாளர்களைத் தேர்வு செய்வதற்கான பொதுத் தகுதித் தேர்வை (Common Eligibility Test - CET) அவ்வப்போது இந்தத் தேர்வு முகமை நடத்துகிறது.

**பொதுத் தகுதித் தேர்வு எழுதத் தகுதிகள்**

இத்தேர்வு எழுத பத்தாம் வகுப்பு அல்லது +2 பயின்றிருந்தால்போதுமானது. இத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் மூன்றாண்டுகள் வரை தகுதி பெறும்.

**தமிழில் எழுதலாம்**

இப்பொதுத் தகுதித் தேர்வினைத் தமிழில் எழுதலாம். ஆங்கிலமொழியோடு இந்திய அரசியலமைப்பின் எட்டாவது பட்டியலில் உள்ள 12 மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியில் தேர்வினை எழுதலாம்.

**எத்தனை முறை எழுதுவது?**

இத்தேர்வினைக் குறிப்பிட்ட வயது வரம்புக்கு உட்பட்டுஎத்தனை முறை வேண்டுமானாலும் எழுதலாம்.

**எங்கே எழுதுவது?**

அந்தந்த மாவட்டம் சார்ந்த தேர்வாளர்கள் அந்தந்த மாவட்டத்தேர்வு மையத்தில் தேர்வு எழுதலாம்.

## வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம்

## Institute of Banking Personnel Selection (IBPS)

வங்கிப் பணியாளராய்ப் பணியாற்ற வேண்டும் என்கிற எண்ணம்இன்றும் எல்லோருக்குள்ளும் உண்டு. பணம் புரளும் துறை என்பதாலும்,நல்ல ஊதியம் கிடைக்கிறது என்பதாலும் இத்துறையை இளையோர் விரும்புவது உண்டு.

**வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம்**

IBPS என்று சுருக்கமாக அழைக்கப்படும் வங்கிப் பணியாளர்தேர்வாணையம் 1975 இல் இந்திய அரசால் உருவாக்கப்பட்டது. பொன்விழாவைக் கொண்டாடும் இந்நிறுவனத்தின் தலைமையகம் மும்பையில் அமைந்துள்ளது. இந்திய அரசின் நிதி அமைச்சகத்தின் கீழ் இந்நிறுவனம் செயல்படுகிறது.

இந்திய அரசால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பணியாளர்களைத் தேர்வுசெய்து பணியமர்த்தும் நிறுவனமாக இந்நிறுவனம் திகழ்கிறது.

**தன்னாட்சி பெற்ற நிறுவனம்**

பாரத ஸ்டேட் வங்கியால் உருவாக்கப்பட்ட தன்னாட்சி பெற்ற அமைப்பாக இவ்வமைப்பு திகழ்கிறது.

பல கோடி விண்ணப்பதாரர்களுக்குத் தேர்வு நடத்தும் நிறுவனமாக இந்நிறுவனம் அமைகிறது.

உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட தேர்வு முறையைத் தன் தனித்துவமாகக் கொண்ட நிறுவனம் இந்நிறுவனம்.

**நோக்கம்**

நியாயமான தேர்வு முறையால் தகுதியான பணியாளர்களைத்தேர்வு செய்வதை நோக்கமாகக் கொண்ட நிறுவனமே IBPS எனும் வங்கிப் பணியாளர் தேர்வாணையம்.

மிக அதிகமான தேர்வாளர்கள் எழுதும் நிறுவனமாகஇந்நிறுவனம் திகழ்கிறது. காலத்திற்கு ஏற்ப தன்னை நவீனப்படுத்திக் கொண்ட தேர்வாணையமாகவும் திகழ்கிறது.

அறிவாற்றல் திறன்மிக்க பணியாளர்களைக் கண்டறிந்து வேலைவாய்ப்புகளை வழங்கும் நிறுவனமாக இந் நிறுவனம் திகழ்கிறது.

**வரலாறு**

1969ஆம் ஆண்டு இந்தியாவில் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன.தனியார் வங்கிகளாக இருந்தபோது, தனித் தனியே பணியாளர்களைத் தேர்வு செய்த வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட பின் IBPS இன் பணி இன்றியமையாததாய் அமைந்தது.

திறன் மிகுந்த வங்கி மேலாண்மை நிறுவனமாக வங்கிப் பணியாளர்தேர்வு நிறுவனம் மாறியது. தேர்வுகளைச் சிறப்பான முறையில் நடத்தும் மாற்றங்களோடு இத்தேர்வு நிறுவனம் 1984ஆம் ஆண்டில் தன்னை நவீனப்படுத்திக் கொண்டது. வங்கிகளைப் புத்தாக்கம் செய்ய இந்நிறுவனத்தின் புதிய செயல்பாடுகள் உதவின.

**நடத்தும் தேர்வுகள்**

வங்கித்துறை உயர் அலுவலர்கள் மற்றும் எழுத்தர்பணியிடங்களுக்கான தேர்வுகளை இந்நிறுவனம் நடத்துகிறது.

**இந்நிறுவனம் நடத்தும் தேர்வுகள்**

**புரொபேஷனரி ஆபீசர்**

வங்கிப் பணியாளர் தேர்வாணையம் IBPS PO/MT எனும்தேர்வினை நடத்துகிறது. வங்கிகளில் பணிபுரிய புரோபேஷனரி ஆபீசர் மற்றும் மேலாண்மைப் பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வை நடத்துகிறது.

IBPS SO

பொதுத்துறை வங்கிகளில் நிலை - 1 (ஸ்கேல் - 1) அதிகாரிகளைத்தேர்வு செய்வதற்கான போட்டித் தேர்வினை நடத்துகிறது.

**எழுத்தர் பணி**

தேசியப் பொதுத்துறை வங்கிகளில் எழுத்தர் பணிக்கு IBPSகிளார்க் தேர்வை நடத்துகிறது.

**IBPS RRB உயர் அலுவலர் தேர்வு**

நாடு முழுக்க உள்ள கிராமப்புற வங்கிகளில் ஸ்கேல்1 உயர் அலுவலர்களுக்கான போட்டித் தேர்வினை நடத்துகிறது.

பொது ஆட்சேர்ப்பு செயல்முறை (CRP) சிறப்பு அதிகாரிகளுக்கானதேர்வுகளையும் இந்நிறுவனம் நடத்துகிறது. நேர்காணல் திறன்,குழு விவாதங்களை நடத்துவதற்கான திறனை வளர்ப்பதற்கான பயிற்சிகளையும் இந்நிறுவனம் வழங்குகிறது. ஆட்சேர்ப்பு பதவி உயர்வு மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான தேர்வு சேவைகளை இந்நிறுவனம் நடத்துகிறது.

**நிர்வாகம்**

இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மும்பை,இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் பேங்கிங் அண்ட் பைனான்ஸ், நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் பேங்க் மேனேஜ்மென்ட், இந்திய வங்கிகள் போன்ற அரசு நிறுவனங்களிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட நிர்வாகிகளால் இந்நிறுவனம் நிர்வகிக்கப்படுகிறது.

**இந்நிறுவன முகவரி**

IBPS House, 90 feet, D.P. Road
Thakur Complex
off. Wefern Express Highway,
Kandivali (E)
Mumbai - 400 101

**அதிகாரபூர்வ இணையதளம்**

ibps.in

## இராணுவத்தில் வேலைவாய்ப்பு

இந்திய நாட்டிற்குத் தொண்டாற்ற வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு இராணுவப் பணி ஓர் இனிய வரப்பிரசாதம். வயது, தேசியம்,உயரம் மற்றும் எடை, மருத்துவ வரலாறு, மனநல வரலாறு, குறைந்தபட்ச கல்வித்தகுதி, தகுதித் தேர்வு,

மருத்துவப் பரிசோதனை, உளவியல் நேர்காணல் ஆகியவற்றின் அடிப்படையில் இராணுவத்திற்கு ஆள் சேர்க்கப்படுகிறார்கள்.

பணியமர்த்தப்படும் இராணுவ வீரர்கள் இந்திய நாட்டின் இராணுவச்சட்டத்திற்கு உட்பட்டவர்களாக மாறுகிறார்கள். சாகசப் பயிற்சிகள் நிறைந்த சவாலான பணி இராணுவப் பணி. இந்திய இராணுவத்திற்குப் பாரம்பரியம் உண்டு.

இந்திய ஆயுதப் படைகள் இந்தியாவின் இராணுவப் படைகள்ஆகும். இதில் நான்கு தொழில் முறைச் சீருடைச் சேவைகள் உள்ளன.

1. இந்திய இராணுவம்
2. இந்திய விமானப் படை
3. இந்திய கடற்படை மற்றும் இந்திய கடலோர காவல் படை

ஆகியன இந்தியாவின் பாதுகாப்பிற்குக் காரணமாக அமைகின்றன.

இந்திய பாதுகாப்பு அமைச்சகம் இத்துறையை நிர்வகிக்கிறது.

**UPSC நடத்தும் இரு முக்கியத் தேர்வுகள்**

இந்திய குடிமைப் பயிற்சித் தேர்வாணையம் எனும் யூனியன்பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அகில இந்திய அளவில் நடத்தும் இரு தேர்வுகள் மூலம் இராணுவ அதிகாரிகளை நியமிக்கிறது.

**தேசியப் பாதுகாப்பு அகாதமி (NDA மற்றும் கடற்படை பாதுகாப்பு அகாதமி NA)**

தேசியப் பாதுகாப்பு அகாதமி மற்றும் கடற்படை அகாதமி தேர்வுஎன்பது தேசியப் பாதுகாப்பு அகாதமி (N.D.A) மற்றும் இந்திய கடற்படை அகாதமி (INA) ஆகியவற்றில் சேர்வதற்காக யூனியன் பப்ளிக்சர்வீஸ் கமிஷன் (UPSC) ஆண்டுக்கு இருமுறை நடத்தும் நுழைவுத் தேர்வு ஆகும். இந்திய இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவற்றில் வேலை தேடும் இளையோரின் நுழைவாயிலாக NDAதேர்வு அமைகிறது.

**தேசியப் பாதுகாப்பு அகாதமி மற்றும் கடற்படை அகாதமி தேர்வுகள்**

நடத்தும் ஆணையம் : UPSC

**சோதிக்கப்படும் திறன்கள்**

பொது அறிவுத் திறன்

எழுத்து ஆங்கிலத் திறன்

தேர்வுக் கட்டணம் : ரூ 100

**இணையதளம்**

www.upsc.gov.in

**எழுதுவதற்குத் தகுதிகள்**

NDA தேர்வுக்குத் தகுதி பெற விண்ணப்பிக்கும் இளையோர்இந்தியக் குடியுரிமை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 16.5 முதல் 19.5 வயதிற்குள் இருக்கவேண்டும்.

**கல்வித் தகுதி**

விண்ணப்பதாரர்கள் தங்கள் 10மற்றும் 12-ம் வகுப்பு கல்வியை அரசால் அங்கீகரிக்கப்பட்ட வாரியம் அல்லது பல்கலைக்கழகத்தில் முடித்திருக்க வேண்டும்.

**தேர்வு முறை**

NDA தேர்வு இரு நிலைகளில் நடத்தப்படுகிறது.

**1. எழுத்துத் தேர்வு**

எழுத்துத் தேர்வு இரு தாள்களைக் கொண்டுள்ளது. கணிதம் மற்றும்பொதுத் திறன் தேர்வு (GAT) இரு தாள்களும் புறநிலை வகைத் தேர்வு. ஆகியன ஒரே நாளில் நடத்தப்படுகின்றன.

கணிதத் தாள், கணிதத் திறனை மதிப்பிடுகிறது.

GAT தாள் ஆங்கில மொழித் திறன், பொது அறிவு மற்றும்பகுத்தறியும் திறனை மதிப்பிடுகிறது.

**2. சேவைகள் தேர்வு வாரியம் (SSB) நடத்தும் நேர்காணல்**

எழுத்துத் தேர்வில் தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள் சர்வீசஸ்செலக்ஷன் போர்டு (SSB) நடத்தும் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர். இந்நேர்காணல், நுண்ணறிவு,

ஆளுமைத் தேர்வு, குழு விவாதம்,உளவியல் சோதனை என்று பல நிலைகளில் அமைகிறது.

upsc.gov.in எனும் இணையதளத்தில் மேலதிக விபரங்களைப்பெறலாம்.

**அக்னிபாத்**

இராணுவத்தில் பணிக்குச் சேர இந்திய அரசு அக்னி வீரர்ஆட்சேர்ப்பு முகாம்களை இந்தியா முழுக்க நடத்துகிறது.

**திட்டத்தின் பெயர்**

அக்னிபத் யோஜ்னா

2024 ஆம் ஆண்டின் காலியிடங்கள்: 25000

பயிற்சிக்காலம் : 10 வாரங்கள் முதல் 6 மாதங்கள் வரை

தேர்வுச் செயல்முறை: பொது நுழைவுத் தேர்வு, உடல் தகுதித்தேர்வு மற்றும் மருத்துவ சோதனை

விண்ணப்பக் கட்டணம்: ரூ.250

**பாடத்திட்டம்**

பொதுஅறிவு: பொது அறிவியல் பாடத்தில் ஒவ்வொன்றுக்கும்15 வினாக்கள் கேட்கப்படும். லாஜிக்கல் ரீசனிங் 5 வினாக்களும்,கணிதத்தில் 15 வினாக்களும் கேட்கப்படும். ஒவ்வொரு சரியான விடைக்கும் 2 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 100 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

- ஆன்லைன் தேர்வானது 50 புறநிலை மல்டிபிள் சாய்ஸ்வினாக்களோடு நடத்தப்படும்.
- ஒரு மணி நேரத்தில் தேர்வு முடிக்க வேண்டும்.
- இரண்டு மணி நேரத் தேர்வு எனில் 100 மதிப்பெண்ணுக்குத் தேர்வுஎழுத வேண்டும்.
- ஒவ்வொரு தவறான பதிலுக்கும் 0.5 மதிப்பெண் கழிக்கப்படும்.

அதிகாரபூர்வ இணையதளம்: jointindianarmy.nic.in

**கல்வித் தகுதி**

**1. பொதுப்பணிக்கு**

அக்னிபாத் திட்டப்படி அக்னி வீரர்கள் பொதுப்பணிக்குத் தேர்வுசெய்யப்பட குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் 45 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

**2. தொழில்நுட்பப் பணிக்கு**

அக்னி வீரர்கள் தொழில்நுட்பப் பணிக்கு +2வில் இயற்பியல்,வேதியியல், கணிதப் பாடங்களைக் கொண்டு படித்து அரசுப் பொதுத் தேர்வில் 50 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**3. ஸ்டோர் கீப்பர் பணிக்கு**

ஸ்டோர் கீப்பர் பணிக்கு எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

**வயது வரம்பு**

விண்ணப்பதாரர்கள் 17 வயது முதல் 21 வயதிற்குள் இருக்கவேண்டும்.

**உடல் தகுதி**

குறைந்தபட்ச உயரம் 165 செ.மீ இருக்க வேண்டும்.

மார்பு அளவு சாதாரண நிலையில் 77 செ.மீ 5 செ.மீ விரிவடையும்தன்மை பெற்றிருக்க வேண்டும்.

**தேர்வு முறை**

விண்ணப்பதாரர் உடல் தகுதியுடன் திறன் தகுதி, மருத்துவத் தகுதி,எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

**சிறப்புத் தகுதி**

என்சிசி பயிற்சி பெற்றவர்கள், ஐடிஐ படித்தவர்கள், விளையாட்டுவீரர்களுக்கு கூடுதல் மதிப்பெண் வழங்கப்படும்.

**பணிக்காலம்**

நான்கு ஆண்டுகள்

**இந்திய துணை இராணுவப் படையில் வேலைவாய்ப்பு**

இந்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் உள்நாட்டுப்பாதுகாப்புப் படைப்பிரிவுகளை நாம் இந்தியத் துணை இராணுவப் படைகள் (paramilitary Forces of India) என்கிறோம். சுதந்திரம் பெற்ற பின் ஒரு சிறப்பு நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட இந்திய ஆயுதப் படைகளின் பிரிவுகளையே நாம் துணை இராணுவப் படைகள் என்கிறோம்.

**பணிகள்**

உள்நாட்டுப் பாதுகாப்புக்கு மட்டுமல்லாமல் இந்தியாவின்பன்னாட்டு எல்லைகளைப் பாதுகாப்பதிலும் இப்படை உதவி செய்கிறது.

இந்தியத் தேர்தலை நியாயமாகவும் அமைதியாகவும் நடத்தஇப்படை உதவி செய்கிறது.

விஜபி பாதுகாப்பு, முக்கிய இடங்களைப் பாதுகாத்தல், இயற்கைப்பேரிடர் வரும்போது உதவுதல் முதலிய பணிகளை மேற்கொள்கிறது.

1. மத்திய பின்னிருப்பு காவல் படை (CRPF)
2. எல்லைப் பாதுகாப்புப் படை (BSF)
3. இந்திய திபெத் எல்லைக் காவல் படை (ITBP)
4. மத்திய தொழிற்சாலைப் பாதுகாப்புப் படை (CISF)
5. சிறப்பு எல்லைப் புறப் படை (SFF)
6. விரைவு அதிரடிப் படை (RAF)
7. அதிரடி பட்டாலியன்கள்
8. இரயில்வே பாதுகாப்புப் படை (RPF)
9. சசசஸ்த்திர சீமை பலம் (SSB)
10. தேசிய பாதுகாப்புப் படை (NSG)
11. சிறப்பு எல்லைப் புறப் படை (SSF)
12. அசாம் ரைப்பிள்ஸ் (AR)
13. ராஷ்ட்ரிய ரைபிள்ஸ்

**இந்தியத் துணை இராணுவப் படைகளில் எவ்வாறு சேர்வது?**

1 UPSC-CAPF தேர்வுகள் மூலம் உதவி காமாண்டன்ட் பணிகளில் சேரலாம்.

வயது: 20 25

**கல்வித் தகுதி**

அங்கீகரிப்பட்ட கல்வி நிலையங்களிலிருந்து பெறப்பட்டஏதேனும் ஒரு பட்டம்.

உயரம்: ஆண்கள் 165 செ.மீ

பெண்கள்: 157 செ.மீ

100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஆண்கள் 16 வினாடிகளிலும்பெண்கள் 18 வினாடிகளிலும் இலக்கை அடைய வேண்டும்.

800 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஆண்கள் 3 நிமிடம்45 வினாடிகளிலும், பெண்கள் 4 நிமிடங்கள் 45 வினாடிகளிலும்இலக்கை அடைய வேண்டும்.

நீளம் தாண்டுதல் (3 வாய்ப்புகளில் ஆண்கள் 3.5 மீட்டரும்பெண்கள் 3 மீட்டரும் தாண்ட வேண்டும்.

**தேர்வு முறை**

**நிலை - 1**

எழுத்துத் தேர்வு- தாள் 1 (இலக்குத்தாள்) பொதுத் திறன் மற்றும்நுண்ணறிவு ஆகிய பொருளில் 125 வினாக்களோடு 2 மணி நேரம்நடத்தப்படும். தாள்: 1, 250 மதிப்பெண்களுக்காக நடத்தப்படும்.

தாள்: 2 (விளக்கத் தாள்)பொது ஆய்வுகள், கட்டுரை மற்றும்புரிதல் திறனைப் பரிசோதிக்க 200 மதிப்பெண்களுக்கு நடத்தப்படும்.

**நிலை - 2**

உடல் திறன் சோதனை, உடல் தர நிலைச் சோதனைக்காக200 மதிப்பெண்களுக்காக நடத்தப்படும்.

**நிலை - 3**

நேர்காணல் 200 மதிப்பெண்கள் என அமையும். மொத்தம்600 மதிப்பெண்களுக்குத் தேர்வுகள் நடத்தப்படும்.

## SSC CPO - SI தேர்வு மூலம் துணை அதிகாரிகள் தேர்வு

மேற்கூறிய அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருக்கும் மாணவர்களுக்கு 3 கட்டங்களாகத் தேர்வுகள் நடத்தப்படும்.

அடுக்கு ஒன்றில் குவான்டிடேட்டிவ் ஆப்டிடியூட் மற்றும்ஆங்கிலப் புரிதலுக்கு 200 மதிப்பெண்களும் ஓட்டம், நீளம் தாண்டுதல்,உயரம் தாண்டுதல், குண்டு எறிதல் ஆகிய தேர்வுகளும் நடத்தப்படும்.

இரண்டாம் அடுக்குத் தேர்வில் ஆங்கில மொழிப் புரிதல் தேர்வு200 மதிப்பெண்களுக்காக நடத்தப்படும். இறுதி நிலை மருத்துவப்பரிசோதனைத் தேர்வாகவும் அமையும்.

SSC கான்ஸ்டபிள் தேர்வுக்குப் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 முதல் 23 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

## இந்திய விமானப் படையில் (Indian Airforce) வேலை வாய்ப்புகள்

இந்திய விமானப் படையில் பொறியியல் பயின்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் நிறைய உள்ளன.

### பொறியியல் பயின்றவர்கள்

இந்திய விமானப் படையில் தொழில்நுட்பப் பிரிவு, தரை வழிக் கட்டுப்பாடு ஆகாய வழிப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் போன்ற பணிகளுக்குப் பொறியியல் பயின்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

### வயது வரம்பு

இந்திய விமானப் படையின் தொழில்நுட்பப் பணிக்கு விண்ணப்பம் செய்கிறவர்கள் 28 வயதிற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

தரைக் கட்டுப்பாட்டுப் பணிகளுக்கு விண்ணப்பம் செய்கிறவர்கள் 25 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

ஆகாய வழிப்பிரிவு(Flying Branch) பணிக்கு 23 வயதிற்குள் சி.டி.எஸ். கம்பைண்ட் டிபன்ஸ் சர்வீஸ் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

### கல்வித் தகுதி

+ 2 பயின்றிருந்தால் இந்த அகாதமியில் பயிலலாம்.

+2 படிப்பில் இயற்பியல், வேதியியல், கணிதம் ஆகிய பாடங்களில் 70 விழுக்காடு மதிப்பெண்களும் ஆங்கிலத்தில் 50 விழுக்காடு மதிப்பெண்களும் பெற வேண்டும்.

**எங்கு படிக்கலாம்?**

மராட்டிய மாநிலம் புனேயில் உள்ள ராணுவப் பொறியியல் கல்லூரி,செகந்திராபாத்திலுள்ள இராணுவக் கல்லூரியில் எலெக்ட்ரானிக் மற்றும் மெக்கானிக் பிரிவில் டெலி கம்யூனிகேஷன் பொறியியல் பயிற்சி பெற்று இந்த விமானப் படையில் பணி புரியலாம்.

## தமிழ்நாடு அரசுத் தேர்வு முகமைகள்

தமிழ்நாடு அரசின் பணியாளர்களைத் தேர்வு செய்யும் பணியாளர் தேர்வாணையமே Tamil Nadu Pubic Service Commission என்று அழைக்கப்படுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (1) ஆவது பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள இத்தேர்வாணையம்

1. மாநில அரசின் பல்வேறு துறைகளுக்குரிய பணியாளர்களைப் போட்டித் தேர்வின் மூலம் தேர்வு செய்கிறது.
2. நேர்காணல்கள் மூலம் நேரடி நியமனங்கள் செய்கிறது.
3. உயர் அலுவலர்களின் பதவி உயர்வு, மாற்றுப் பணி ஆகியவற்றிற்கான தேர்வுகளை நடத்துகிறது
4. பணி நியமனத்திற்கான விதிமுறைகளை வகுத்துச் செயல்படுத்துகிறது.
5. பல்வேறு பணியிடங்களின் ஒழுங்கு நடவடிக்கையைமேற்கொள்கிறது.
6. பணியாளர் தேர்வு தொடர்பாக அரசுக்கு ஆலோசனைவழங்குகிறது.

**பணிகள்**

- ❖ எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் வடிவிலமைந்த நேர்முகத் தேர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய தேர்வுகளை வடிவமைத்து நடத்துகிறது.
- ❖ விண்ணப்பதாரர்களின் சான்றிதழ்களைச் சரிபார்த்து உண்மைத் தன்மையை ஆராய்கிறது.
- ❖ தேர்வுகளில் வெற்றி பெற்றோருக்குப் பணி நியமன ஆணைகளை வழங்குகிறது.
- ❖ 2005 ஆம் ஆண்டிற்கான தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி கேட்கப்படும் வினாக்களுக்குப் பதில் அனுப்புகிறது.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவிலிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உரிய பதில் அளிக்கிறது.

**ஆண்டுத் திட்டம்**

tnpsc.gov.in எனும் இணைய தளத்தில் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் புசழரி-1 முதல் புசழரி - 4 வரையிலான தேர்வுகளுக்கான ஆண்டுத் திட்டத்தை வெளியிடுகிறது.

**அமைப்பு**

1929 இல் சென்னை மாகாண சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம் ஒரு தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்களைக் கொண்டு இத்தேர்வாணையம் உருவாக்கப்பட்டது.

அரசு அலுவலகங்களில் உதவியாளர் முதல் வருவாய்க்கோட்டாட்சியர், வட்டாட்சியர், நகராட்சி ஆணையாளர், துணைக் காவல் கண்காணிப்பாளர், துணை ஆட்சியர் போன்ற முதன்மைப் பணிகளுக்குத் தேவையானவர்களை இத்தேர்வாணையம் தேர்வுகள் மூலம் தேர்வு செய்து பணி நியமனம் செய்கிறது.

## TNPSC Group - 1

குருப் - 1 தேர்வுகள் Preliminary மற்றும் Main என்று அடுத்தடுத்து நடத்தப்படுகின்றன.

**ஆரம்பத் தேர்வு (Preliminary)**

குழு - 1 அலுவலர்களுக்கான தேர்வுகளில்

பொது அறிவியல், இந்திய வரலாறு, இந்தியப் புவியியல்,பொருளாதாரமும் வணிகவியலும், இந்திய அரசியல், இந்திய தேசிய இயக்கங்கள், நடப்பு நிகழ்ச்சிகள் மற்றும் மனத் திறன் தொடர்பான வினாக்கள் கேட்கப்படும்.

## Group - 1 Main Exam

ஆரம்ப நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற பின் Main Exam எனும் முக்கியத் தேர்வுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். இரு தாள்கள் எழுத வேண்டும்.

**தாள்: 1 பாடத்திட்டம்**

1. நவீன இந்தியாவும் இந்தியக் கலாச்சாரமும்
2. உலகளாவிய மற்றும் தேசிய அளவில் நடக்கும் முக்கியநிகழ்வுகளும் நடப்பு நிகழ்ச்சிகளும்
3. புள்ளி விபரப் பகுப்பாய்வு வரைபடங்கள்
4. சமூகப் பிரச்சினைகள் மற்றும் தற்போதைய முக்கியப்பிரச்சினைகள்

**தாள்: 2 பாடத்திட்டம்**

1. இந்திய அரசியல்
2. இந்தியப் பொருளாதாரமும் இந்தியப் புவியியலும்
3. இந்திய வளர்ச்சியில் அறிவியல் தொழில்நுட்பத்தின் பங்கு
4. தமிழ் மொழி, தமிழ்ச் சமூகம், தமிழ்ப் பண்பாடு மற்றும்தமிழ் மரபு.
5. தமிழ்நாட்டு ஆட்சி அமைப்பு ஆகிய தலைப்புகளில்வினாக்கள் அமையும்.

**குருப் - 2 தேர்வு**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப் - 2 குரூப் -2ஏ தேர்வு

1. முதல்நிலை
2. முதன்மை

என்று இரு கட்டங்களாக நடத்தப்படும்.

குரூப் - 2 மற்றும் குரூப் - 2ஏ நிலைகளுக்கான முதல் நிலைத்தேர்வு கொள்குறி வினாக்களோடு நடைபெறும்.

அதில் தேர்ச்சி பெறுவோருக்கு முதன்மைத் தேர்வு நடைபெறும்.

குருப் - 2 தேர்வுக்குத் தமிழ் மொழித் தகுதித் தாள் மற்றும் பொது அறிவுத் தாள் எனும் இரு தாள்களில் முதன்மைத் தேர்வு நடத்தப்படும். பொது அறிவுத் தாள் பட்டப்படிப்பு தரத்தில் நடத்தப்படும்.

தமிழ் மொழித் தகுதித் தாள் பத்தாம் வகுப்பு தரத்தில் நடத்தப்படும். இப்பணியிடங்களுக்கு நேர்காணல் இல்லை.

தமிழ்நாடு வனச் சார் நிலைப் பணி மற்றும் தமிழ்நாட்டு வனத் தோட்டக் கழகத்தில் உள்ள வனவர் பதவி குருப் - 2 மூலம் நிரப்பப்படுகிறது. இத்தேர்வுகளுக்கு உடல்திறன் சோதனை உண்டு.

**Group - IV பாடத்திட்டம்**

பொது அறிவியல், நடப்பு நிகழ்வுகள், புவியியல், இந்திய,தமிழக வரலாறும் பண்பாடும், இந்திய அரசியல், இந்தியப் பொருளாதாரம், இந்திய தேசிய இயக்கங்கள் ஆகிய தலைப்புகளோடு Aptitude and Mental Ability குறித்த வினாக்களும் அமைகின்றன.

## ஆசிரியர் தேர்வு வாரியம்
## (Tamil Nadu Teachers Recruitment Board)

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் (Tamil Nadu Teachers Recruitment Board) தமிழ்நாடரசின் கீழ் இயங்கும் தன்னாட்சிஅமைப்பாகும். அரசுப் பள்ளிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள்மற்றும் கல்லூரிகளுக்குத் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்யும்தேர்வு வாரியமாகத் திகழ்கிறது.

**இருப்பிடம்**

சென்னை நுங்கப்பாக்கம் கல்லூரிச் சாலையில் உள்ள பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் உள்ள ஈவிகே சம்பத் மாளிகையின் மூன்றாம் மற்றும் நான்காம் தளத்தில் இந்நிறுவனம் அமைந்துள்ளது. வேறு தேர்வாணையத்தின் கால தாமதத்தைக் களைவதற்காக 17.08.1987 இல் இவ்வாரியம் அமைக்கப்பட்டது.

**பணிகள்**

குறித்த கால வரையறைக்குள் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் செயல் முறைகளை எளிதாக்கும் பொருட்டு இவ்வாரியம் திறம்படச் செயல்பட்டுவருகிறது.

பள்ளி ஆசிரியர்களைத் தேர்வு செய்ய உருவாக்கப்பட்டாலும் இவ்வாரியம் கல்லூரியில் பணியாற்ற உதவிப் பேராசிரியர்களைப்போட்டித் தேர்வின் மூலம் தெரிவுசெய்யும் வாரியமாகவும் திகழ்கிறது.அரசு சட்டக்கல்லூரி உதவிப் பேராசிரியர்களையும் இவ்வாரியம்தேர்வுசெய்கிறது.

**அமைப்பு**

இந்திய ஆட்சிப் பணியின் மூத்த அதிகாரி தலைவராகவும், பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் பொறுப்பில்ஒருவரும் உறுப்பினர் செயலர் பொறுப்பில் ஒருவரும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

**வாரியத்தின் ஆட்சேர்ப்புப் பணி**

இடைநிலை வகுப்பாசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், ஓவியஆசிரியர்கள், பி.டி.உதவியாளர்கள், தையல் ஆசிரியர்கள், இசைஆசிரியர்கள், முதுகலை உதவியாளர்கள், உடற்கல்வி இயக்குநர்கள்,கணினிப் பயிற்றுநர்கள், தொகுதிக் கல்வி அலுவலர்கள், வேளாண்பயிற்றுநர்கள்,SCERT மூத்த இளநிலை விரிவுரையாளர்கள் ஆகியோரையும்அரசு கலை அறிவியல் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள், அரசுப்பொறியியல் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள், அரசு பாலிடெக்னிக்கல்லூரி விரிவுரையாளர்கள் ஆகியோரையும் அரசு சட்டக் கல்லூரி உதவிப்பேராசிரியர்களையும் இவ்வாரியம் போட்டித் தேர்வின் மூலம் நியமனம்செய்கிறது.

**இணையதளம்**

trb.tn.nic.in எனும் இணையதளத்தில் மேலதிக விபரங்களைஅறிந்துகொள்ளலாம்.

**ஆசிரியர் தகுதித் தேர்வு (Teacher Eligibility Test)**

ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரைபயிற்றுவிக்கும்ஆசிரியர்களின் தரத்தை உறுதிப்படுத்த நடத்தப்படும் தேர்வாகும்.கற்பித்தல் தரத்தை மேம்படுத்த, 2011 ஆம் ஆண்டு வுநுவு தேர்வு இந்தியஅரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

தேசிய ஆசிரியர் கல்விக் குழும வழிகாட்டலின் படி தமிழ் நாடரசின்பள்ளிக் கல்வித் துறை இத்தேர்வுக்கான அரசாணையை வெளியிட்டது.தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம், ஆசிரியர் நியமனத்திற்கான தகுதித் தேர்வுகளை நடத்திவருகிறது. அத்தேர்வில் தேர்ச்சி பெற்றால் மட்டுமேஅரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர்.

**தேர்வு எழுதத் தகுதிகள்**

1. தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் வெளியிட்டுள்ளவிதிமுறைப்படி, இளநிலை கல்வியியல் முடித்தவர்களே இத்தேர்வு எழுதலாம் என அறிவிக்கப்பட்டது.
2. அதன் பின்னர் இளநிலைப் பொறியியல் பட்டப்படிப்புடன்இளநிலை கல்வியியல் முடித்தவர்களும் இத்தேர்வு எழுதஅனுமதிக்கப்பட்டனர்.

**தேர்வுத் தாள்கள்**

❖ இரண்டு தாள்களை உடைய தேர்வு இது.

- ❖ 150 வினாக்கள் கேட்கப்படும்.
- ❖ சரியான விடையைத் தேர்வுசெய்யும் முறையில் ஒரு சரியானவிடைக்கு ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.
- ❖ கால அளவு 180 நிமிடங்கள்.
- ❖ பொதுப் பிரிவினருக்கு 60% மதிப்பெண்களும், இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு 55%மதிப்பெண்களும் பெற்றால் தேர்ச்சி பெற்றதாய் அறிவிக்கப்படும்.

**முதல் தாள்**

1. குழந்தைகள் மேம்பாடு மற்றும் கற்பித்தல் முறை
2. மொழித்தாள் - 1 (கற்பிக்கும் மொழி)
3. மொழித்தாள் - 2 (விருப்ப மொழி)
4. கணிதம்
5. சுற்றுச்சூழலியல்

ஆகிய 5 தலைப்புகளுக்கு ஒவ்வொன்றுக்கும் 30 மதிப்பெண்கள்வினாக்கள் வழங்கப்படும்.

**இரண்டாம் தாள்**

முற்கூறிய முதல் மூன்று தலைப்புகளோடு நான்காவதாக கணிதம் மற்றும் அறிவியல் (இளம் அறிவியல் பாடப் பிரிவினர்)

சமூக அறிவியல் (இளங்கலைப் பாடப் பிரிவினருக்கு) 60 மதிப்பெண்கள் வினாக்கள் கேட்கப்படும்.

## தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

தமிழ்நாடு காவல், சிறைத் துறை மற்றும் தீயணைப்புத் துறை போன்ற சீருடைப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் (TNUSRB) எனும் தேர்வு வாரியம் 1991ஆம் ஆண்டு தமிழ்நாடரசின் உள்துறை அரசாணை மூலம் தோற்றுவிக்கப்பட்டது.

**தலைமையக முகவரி**

பி.டி.லீ செங்கல்வராய நாயக்கர் கட்டிடம், எண்: 807,இரண்டாவது மாடி, அண்ணா சாலை, சென்னை - 600002

தலைவர், உறுப்பினர், உறுப்பினர் செயலர் ஆகியோர் இவ்வாரியத்தை நிர்வகிக்கிறார்கள்.

**இணையதள முகவரி**

www.tnusrb.tn.gov.in

**நடத்தும் தேர்வுகள்**

காவல் துறை உதவி ஆய்வாளர், நிலைய அதிகாரி, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, காவல் துறை கான்ஸ்டபிள்,ஜெயில் வார்டன், தீயணைப்பு வீரர்கள் போன்றவற்றிற்கான போட்டித் தேர்வுகளை நடத்துகிறது.

இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிக்கான (3359 பணியிடங்கள்) பொதுத் தேர்வு அறிவிப்பை 8.08.2023 அன்று வாரியம் வெளியிட்டது.

**கல்வித் தகுதி**

குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாமல், அதற்கு மேற்பட்ட கல்வித் தகுதியினைப் பெற்றிருந்தாலும் அவ்விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.

**வயது வரம்பு**

பொதுப்பிரிவினருக்கு 18 வயது முதல் 26 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். பிற்படுத்தப்பட்டவகுப்பினருக்கு 18 முதல் 28 வயது வரை விண்ணப்பிக்க அனுமதியும்,பட்டியலின விண்ணப்பதாரருக்கு 18 வயது முதல் 31 வயதும் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு 18 வயது முதல் 31 வயது வரையும் முன்னாள் இராணுவத்தினருக்கு 47 வயதிற்கு மேற்படாத வயது வரம்பும் வாரியத்தால் வகுக்கப்பட்டுள்ளது.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | வேலைவாய்ப்புஅலுவலகங்களின் பணிகளைக் குறிப்பிடுக. | K2 | CO2 | PO4 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தமிழ்நாடுஅரசுதேர்வுமுகமைகள் பற்றிஎழுதுக. | K3 | CO3 | PO5 |
| 3 | இரயில்வேபணியாளர் தேர்வுவாரியத்தின் செயல்பாடுகளைக் கூறு. | K4 | CO4 | PO1 |
| 4 | தொழில்நுட்பகலைஞர்களுக்குரியவேலைவாய்ப்புகள் யாவை? | K5 | CO5 | PO2 |
| 5 | இந்தியராணுவப் படைகளுக்கானதேர்வுகள் குறித்துவிளக்குக. | K1 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | அரசுபோட்டித் தேர்வுகளும் தேர்வுமுகமைகளும் குறித்துகட்டுரைவரைக. | K2 | CO1 | PO4 |
| 2 | தேசியப் பணியாளர் தேர்வுமுகமைபற்றிஎடுத்துரைக்க. | K1 | CO2 | PO6 |
| 3 | இந்தியராணுவப் படையில் சேர்வதற்கானதகுதிகளைகுறிப்பிடுக. | K4 | CO2 | PO5 |
| 4 | தமிழ்நாடுஅரசுதேர்வாணையம் குறித்துவிரிவாகவிளக்குக. | K3 | CO4 | PO6 |
| 5 | வங்கிப் பணியாளர் தேர்வுமுகமைகுறித்துவிவரி. | K5 | CO1 | PO3 |

## இயல் 2

## பணிப்பொறுப்புகளும் போட்டித் தேர்வுகளும்

பொறுப்புகள் வெறுப்பதற்கோ துறப்பதற்கோ அல்ல. நம்மை நாம் உலகிற்கு அளிக்கும் நல் வாய்ப்புகளே பொறுப்புகள். சங்கடங்களைச் சவால்களாக ஏற்பவர்கள்

வாழ்வில் வெற்றி பெறுகிறார்கள். யார் திறம்படச் செய்வார்களோ அவர்களை நோக்கியே உயர்ந்த பொறுப்புகள் தரப்படுகின்றன. குடும்பத்தை நிர்வகிக்கத் தெரிந்தால் நம்மால் நூற்றுக்கணக்கானவர்கள் பணிபுரியும் நிறுவனத்தையும் சரியாக நிர்வகிக்க முடியும்.

**பொறுப்புத் துறப்பு நல்லதா?**

22 வயதில் மென்பொருள் பொறியாளராக சிடிஎஸ், டீசிஎஸ்,ஜோஹோ, விப்ரோ போன்ற பன்னாட்டு நிறுவனங்களில் உள் நுழைகிற இளையோர் 10 ஆண்டுக்குள் 20 நிறுவனங்களுக்கு மாறி பல இலட்சம் ஊதியம் பெறக்கூடியவர்களாக மாறுகிறார்களே! எப்படி? உழைப்பு,உழைப்பு, உழைப்பு ஒன்றுதான். பெங்களூரு, ஹைதராபாத், சென்னை போன்ற பெரு நகரங்களில் கழுத்தில் அடையாள அட்டையோடு காலை 5.30 மணிக்கே பேருந்துக்காகக் காத்திருக்கும் இளையோரைக் காண முடிகிறது. கோடி ரூபாய்க்கு வீடு, வெளிநாட்டு மகிழ்வுந்து என்று வசதியாய் வாழ்வதற்குத் தரும் விலை அவர்களின் சிந்தனை ஆற்றலும் செயல்திறனும்தான். காலம் முழுக்க கற்றுக்கொண்டே இருக்கிறார்கள்,தங்களின் ஆளுமையாற்றலை வெவ்வேறு விதத்தில் நிரூபித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

**நம்மை நாமே புதுப்பித்துக்கொள்வோம்**

வெளிநாடு போனால் இதைவிட அதிகமாய் ஊதியம் பெறலாமே! எனும் உந்துதலால் வேலை முடிந்து வந்த பின்னும் புதிது புதிதாய்ப் படிக்கிறார்கள். மாலை 6 மணிக்கு மேல் மூன்றாவது ஷிப்டில் நடத்தப்படும் படிப்புகளில் பிக் டேட்டா, சைபர் செக்யூரிட்டி, டேட்டா சயின்ஸ், இ மார்க்கெட்டிங் என்று விதவிதமாய் படிக்கிறார்கள். 30 வயதிற்குள் தலைமைச் செயல் அதிகாரி எனும் சிகரத்தை அவர்களால் எட்ட முடிகிறது. மென்பொருள் துறை வேண்டாம், இந்திய குடிமைப் பயிற்சித் தேர்வில் தேர்ச்சிபெற்று இந்திய ஆட்சிப் பணிக்கு வந்து மக்களுக்குச் சேவை செய்வோம் என்று இரவு பகலாய் போட்டித் தேர்வுக்குத் தயாரிக்கும் அளவுக்கு முன்னேறிச் சாதிக்கிறார்கள்.

**போட்டித் தேர்வுகள் விழிப்புணர்வு**

குரூப்-4 கிராம நிர்வாக அலுவலர்களை 8000 பேரை நியமிக்க நடைபெற்ற டி.என்.பி.எஸ்.சி. போட்டித் தேர்வில் 22 இலட்சம் பேர் எழுதினார்கள். முதலில் சாதாரண பணிக்குத் தெரிவாகிவிட்டு வேலை பார்த்துக்கொண்டே இன்னும் அதிகமாகப் பயிற்சி எடுத்து குரூப்-1 உயர் அலுவலராகப் பொறுப்பேற்று சாதிக்கும் இளையோரைத்

தமிழ்நாட்டில் இப்போது அதிகமாகக் காண முடிகிறது. 220 பணியிடங்களுக்கான குரூப்-3 தேர்வினை மூன்று இலட்சம் பேர் தமிழ்நாட்டில் எழுதியுள்ளனர்.

**மத்திய அரசுப் பணிகளில் என்ன நிலை?**

கிராம நிர்வாக அலுவலர் பணிக்கு விண்ணப்பிக்கும் 22 இலட்சம் பேர், மத்திய அரசின் ரயில்வே துறைப் பணிகளுக்கு, வங்கிப் பணிகளுக்கு 4000-க்கும் அதிகமான பெரிய பொறுப்பு மிக்க பணிகளுக்கு விண்ணப்பிப்பது குறைவாகவே இருக்கிறது.

**தவறான எண்ணம்**

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகள் மிகக் கடினம் நாம் அதில் தேர்ச்சி பெறல் கடினம் என்று நம் மாநில மாணவர்கள் எண்ணக்கூடாது என்ற காரணத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு முழுக்கத் வேலை வாய்ப்புத் திறன் மேம்பாட்டு மையங்களைத் தமிழ்நாடரசு உருவாக்கியுள்ளது. சிங்கப்பூர் தேசிய நூலகத்தைவிட அதி நவீன நூலகங்களை உருவாக்கிப் போட்டித் தேர்வு மையங்களை அவற்றில் நிறுவிவருகிறது.

**விழிப்புணர்வு தேவை**

தமிழ்நாட்டில் 75 மத்திய அரசின் பெரிய நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. என்.எல்.சி, பாரத் மிகுமின் நிறுவனம், இந்தியன் ஆயில்,சென்னை பெட்ரோலிய சுத்திகரிப்பு நிறுவனம் போன்றவற்றில் தமிழ்நாட்டிற்குள்ளாகப் பணியாற்ற முடியும் எனும் விழிப்புணர்வு உருவாக்கப்பட்டு வருகிறது.

2024 டிசம்பர் மாதத்திற்குள் மத்திய அரசின் பல்வேறு துறைகளில் பணியாளர்கள் பணி நிறைவுபெறுவதால் சுமார் 10 இலட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படப்போகின்றன.

இந்தியிலும் ஆங்கிலத்திலும் மட்டுமே நடைபெற்ற மத்திய அரசின் தேர்வுகளின் வினாக்கள் இப்போது தமிழ் மொழிபெயர்ப்புடன் நடத்தப்படுகின்றன.

SSCயால் 2022 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பல்வேறு துறைகளுக்கானஒருங்கிணைந்த போட்டித் தேர்வுகளில் (ஊபுடுநு) உதவித் தணிக்கை அதிகாரி, ரயில்வே துறையின் உதவிப் பிரிவு அதிகாரி, வெளியுறவுத்துறை உதவிப் பிரிவு அதிகாரி, அமலாக்கத் துறை உதவி அமலாக்கத்துறை அதிகாரிகள் போன்ற பணிகளுக்கு 30 வயது வரை வயது வரம்பு உயர்த்தப்பட்டும் அச் செய்தி, தமிழ்நாட்டுக் கல்லூரி மாணவர்களை ஏன் எட்டவில்லை என்ற கேள்வி எழுந்தது.

மத்திய அரசின் பல தேர்வுகளுக்கு இந்தியிலும் ஆங்கிலத்திலும் மட்டுமே விடையளிக்க முடியும் என்னும் நிலை தற்போது இல்லை. தரமான போட்டித் தேர்வுப் பயிற்சி மையங்களும் தரமான பார்வை நூல்களும் தமிழ்நாட்டில் இப்போது தாராளமாகிவிட்டன.

நம்மால் நிச்சயமாக மத்திய அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளில் சாதிக்க முடியும் எனும் உறுதி அதிகமாக வேண்டும்.

## காட்சி ஊடகத்துறை வேலை வாய்ப்புகள்

தமிழ்நாடு அரசு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரியும் வகையில் மூன்றாண்டுகள் பட்டயப் படிப்புகளை நடத்துகிறது.

1. திரைக் கதை மற்றும் இயக்குநர் படிப்பு
2. சினிமாட்டோகிராபி
3. பிலிம் புராசசிங்
4. ஒலிப்பதிவு மற்றும் ஒலித் தொழில்நுட்பம்
5. பிலிம் எடிட்டிங்

### கல்வித் தகுதி

திரைக்கதை மற்றும் இயக்குநர் படிப்புக்குக் குறைந்தபட்ச கல்வித் தகுதி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பெறப்பட்ட ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு. மற்ற பட்டயப் படிப்புகளுக்கு 10, +2, டிப்ளமோ எலெக்ட்ரிக்கல், எலெக்ட்ரானிக்ஸ், எலெக்ட்ரானிக்ஸ் கம்யூனிகேஷன் பயின்றிருக்க வேண்டும்.

### முகவரி

முதல்வர், தமிழ்நாடு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனம்,சி.ஐ.டி. வளாகம், சென்னை 600113 எனும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

### அரசுவேலைவாய்ப்பு

தமிழ்நாடரசின் இப்பட்டயங்களைப் பெற்றவர்களுக்கு இந்திய செய்தி மற்றும் தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பிரச்சார் பாரதி (அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன்) நிறுவனத்தில் வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

செய்தி மற்றும் தகவல் பிரிவு, வெளியீட்டுப் பிரிவு, விளம்பரப் பிரிவு, செய்தி மக்கள் தொடர்புத் துறை ஆகியவற்றில் வேலை வாய்ப்பு ஏற்படுகிறது.

அரசு வேலை கிடைக்காவிட்டாலும் பல்வேறு திரைப்பட நிறுவனங்களில் பணி வாய்ப்புகள் குவிந்து கிடைக்கின்றன.

சன் தொலைக்காட்சி, விஜய் தொலைக்காட்சி, புதிய தலைமுறை தொலைக்காட்சி போன்றவற்றின் நிகழ்ச்சித் தயாரிப்புப் பிரிவிலும் விளம்பரப் படங்கள் தயாரிப்புப் பிரிவிலும் செய்திப் பிரிவிலும் வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன.

இணையத்துடன் இணைக்கப்பட்ட சாதனங்கள் வழியே ஸ்ட்ரீம் செய்யப்பட்ட உள்ளடக்கத்தை வழங்கும் Over the Top எனும் OTTதளத்தில் படங்கள் தயாரித்து வெளியிட முடிகிறது.

சேட்டிலைட் தொலைக்காட்சிகளில் வெளியாகும் விளம்பரப் படங்களைத் தயாரிக்கவும் முடிகிறது.

## இலட்சக்கணக்கில் ஊதியம் பெற்றுத் தரும் தகவல் தொழில்நுட்பத் துறை

2000 எனும் புத்தாயிரத்திற்குப் பின்பான காலகட்டத்தைத் தகவல் தொழில்நுட்ப யுகம் என்று சொல்லக்கூடிய அளவு படித்தவுடன் வேலைகள் தரக்கூடிய முன்னணித் துறையாகத் தகவல் தொழில் நுட்பத் துறை திகழ்கிறது. கொரானாவில் உலக நாடுகள் வெகுவாக பாதிக்கப்பட்டு அனைத்துத் தொழில்களும் முடங்கியபோது Work From Home எனும் வீட்டிலிருந்து பணியாற்றும் வசதியைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களே வழங்கின.

### வளாக நேர்காணல்கள்

அண்ணா பல்கலைக்கழக ஆளுகைக்குட்பட்ட தமிழ்நாட்டுப் பொறியியல் கல்லூரிகளில் B.E (கணினி அறிவியல்) பிடெக் கணினி அறிவியல்,B.E தகவல் தொழில்நுட்பம் போன்ற படிப்புகளில் படித்தோருக்கு வளாக நேர்காணல்கள் நடத்தப்பட்டு உடனே வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன.

B.Sc கணினி அறிவியல்,B.Sc தகவல் தொழில்நுட்பம் ஆகியபடிப்புகள், இளமறிவியல் முடித்த பின் MCA.,M.SC (கணினி இயல்) போன்ற முதுநிலைக் கணினிப் பட்ட மேற்படிப்புகள் படித்தோருக்கு

Zoho, Wipro, TCS, Infosys, HCL, Tech Mahindra, Accenture போன்ற கணினி நிறுவனங்களில் சிறப்பான வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. இத்துறையில் சிறந்து

விளங்கும் இளையோருக்கு வெளிநாட்டில் அதிக ஊதியத்திற்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன.

**வளர்ச்சி**

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் இந்திய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி பெரிதும் வளர்ந்துள்ளது. புரோகிராம் கோடிங்,இணைய தளங்களை வடிவமைத்தல், கன்வெர்ஜன்ஸ், சேவைப் பிரிவு, எம்படட்சிஸ்டம் போன்றவற்றில் வேலை வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

**என்ன எதிர்பார்க்கிறார்கள்?**

உலகளாவிய அளவில் அறிமுகமாகும் தகவல் தொழில்நுட்பத்தின். புதிய போக்குகளைச் சரியாக உள்வாங்கி மேம்படுத்திக்கொள்ள வேண்டும். ஐ.டி ஊழியர்களின் செயல்திறனே தொழில் உற்பத்தித் திறனாக உருமாறுகிறது. எனவே, குழுவோடு இணைந்து பணியாற்றுதல்,மக்கள் தொடர்புக் கலை, பணியனுபவம் ஆகியன தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களை அடுத்தடுத்து உயர்த்துகிறது.

**பணிகள்**

தகவல் தொழில்நுட்ப உதவியாளர்.

**கோடிங் எழுதுநர்**

கணினி ஆய்வாளர், நெட்வொர்க் அசோசியேட், தரவுத்தள நிர்வாகிகள் ஆகிய பணியிடங்கள் ஒவ்வோராண்டும் உருவாகின்றன. C, C++, Python, R, Java போன்ற குறியீட்டு மொழிகளை மாணவர்கள் கற்றுக்கொள்ளும்போது உடனே பணி கிடைக்கிறது.

**உள்ளடக்க எழுத்தாளர்**

உலகின் பிரபல தொலைக்காட்சிகளும் இணைய தளங்களும் பி.ஏ. (தமிழ்) பயின்ற, படைப்பாற்றல் மிக்க உள்ளடக்க எழுத்தாளர்களை வரவேற்கின்றன. வலைதளங்கள், வலைதளப் பதிவுகளைச் சுவைஞர்கள் ஊடக உள்ளடக்க இரசிக்கும் வகையில் எழுதித் தர சமூக எழுத்தாளர்களை இணைய தளங்களும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும் எதிர்பார்க்கின்றன.

பி.ஏ.(தமிழ்) பயிலும் மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் சாதிக்கத் தங்கள் கணினி அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். திறன்மிகுந்த மாணவர்களுக்கு

டேட்டா குவஸ்ட் (Data Quest),நாஸ்காம் (NASS COM) போன்ற நிறுவனங்கள் வேலை வழங்குகின்றன

**சவால்கள்**

அதிநவீனத் துறை என்பதால் மணிக்கொரு முறை துறை வளர்ச்சியடைந்துகொண்டே இருக்கிறது. எனவே, மாணவர்கள் அவ்வப்போது நடக்கும் மாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்பத் தங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

**எதிர்பார்க்கும் திறன்கள்**

தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்ற புரோம்களை எழுதும் திறன், ஆராய்ந்தறியும் திறன், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தரவுகளைச்சரியாகப் புரிந்துகொள்ளும் திறன், தயக்கமில்லாமல் பிறருடன் தொடர்புகொள்ளும் மொழியாற்றல், அனைவரையும் ஒன்றிணைத்துச் செல்லும் தலைமைப் பண்பு, கல்வித் தகுதியோடு நுட்பமான அறிவாற்றல் ஆகியன மிகவும் அவசியமாகிறது.

**இந்திய குடிமைப் பயிற்சிப் பணிப் பொறுப்புகளும் போட்டித் தேர்வும்**

இந்தியக் குடிமைப் பணித்தேர்வு இந்தியாவை ஆட்சி செய்ய 1886இல் (Civil Service Exam)ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டது. இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்த பின், இந்தியக் குடியரசின் குடிமைப் பணித் தேர்வாக நடத்தப்பட்டது.

**இந்தியக் குடியியல் பணிகள்**

இந்தியா சுதந்திரம் பெற்ற பின் UPSC எனும் இந்தியக் குடிமையியல் பணிகள் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வில் பங்கேற்க இலட்சக்கணக்கான இளையோர்கள் விரும்புகின்றனர்.

**தகுதிகள்**

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம்.இத்தேர்வை எழுதுகிறவர் இந்தியக் குடிமகனாக/குடிமகளாக இருக்க வேண்டும்.

**வயது வரம்பு**

இப்போட்டித் தேர்வை எழுதக் குறைந்தபட்சம் 21 வயது ஆகும். அதிகபட்ச வயது வரம்பு, பொதுப் பிரிவினருக்கு 32 வயதும், இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 35 வயதும், பட்டியல் இனம் மற்றும் பழங்குடியினருக்கு 37 வயதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எத்தனை முறை எழுதலாம்?

- ❖ பொதுப் பிரிவினர் மற்றும் கிரீமிலேயரில் உள்ளவர்கள் அதிகபட்சமாக ஆறு முறை மட்டும் எழுதலாம்.
- ❖ இதர பிற்பட்ட வகுப்பினர் அதிகபட்சமாக ஏழு முறைஎழுதலாம்.
- ❖ பட்டியலினம் மற்றும் பழங்குடியினர் எத்தனை முறைகள் வேண்டுமானாலும் எழுதலாம்.

**தேர்வின் மூன்று படிநிலைகள்**

**முதனிலைத் தேர்வு**

முதனிலைத் தேர்வு (Preliminary Exam) கொள்குறி வகைத் தேர்வாக நடத்தப்படுகிறது.

**முதன்மைத் தேர்வு**

முதனிலைத் தேர்வில் தேறியவர்கள் முதன்மைத் தேர்வுக்கு (Main Examination) அனுமதிக்கப்படுகின்றனர்.

**இரு கட்டங்கள்**

முதன்மைத் தேர்வானது இரு கட்டங்களில், விளக்க எழுத்துத் தேர்வாகவும் (Decriptive Written Exam) நேர்முகத் தேர்வாகவும் (Interview Test)நடத்தப்படுகிறது.

முதன்மை விளக்க எழுத்துத் தேர்வில் வெற்றிபெற்றோரே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

முதன்மை விளக்க எழுத்துத் தேர்விலும் நேர்முகத் தேர்விலும் பெற்ற மதிப்பெண்களைக் கூட்டி, அதில் அதிகமதிப்பெண் பெறுவோர் பட்டியலை இந்தியக் குடியியல் பணிகள் தேர்வாணையம் மத்தியப் பணியாளர் அமைச்சகத்திற்கு அனுப்பும்.

தேர்வாணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்தியப் பணியாளர் அமைச்சகம் தேர்ச்சி பெற்றோருக்கு அவர்கள் பெற்ற ரேங்க் அடிப்படையில் துறைகளையும் பணிபுரியவேண்டிய மாநிலங்களையும் ஒதுக்கீடு செய்யும்.

**விண்ணப்பிக்கவேண்டிய இணைய தளமுகவரி**

upsconline.nic.in

மேற்கண்ட இணையதள முகவரியில் விண்ணப்பதாரர்கள் (ONE TIME REGISTRATION (OTR) FOR EXAMINATIONS OF UPSC AND ONLINEAPPLICATION) பதிவு செய்துகொள்ளலாம். தேர்வுக்கூட அனுமதிஅட்டையை (E-Admit Card) அதே இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**வினாத்தாளைக் கோரலாம்**

தேர்வு முடிந்த மறுநாளிலிருந்து ஒரு வாரத்திற்குள் தேர்வு எழுதியவினாத்தாளை UPSC இணையதளத்தின் வழியே (Online Question Paper Representation portal) மூலம் கேட்கலாம்.

**தேர்வுத் திட்ட அட்டவணை**

UPSC யின் இணையதளம் ஆணையத்தால் அடுத்து அறிவிக்கப்படஉள்ள போட்டித் தேர்வு கால அட்டவணையை வெளியிடுகிறது.இதனால் தேர்வர்கள் சரியான திட்டமிடலோடு தேர்வை எதிர்கொள்ளமுடிகிறது.

**இந்தியக் குடியியல் பணிகளின் வகைகள்**

இந்தியக் குடியியல் பணிகளை,

1. அனைத்திந்தியப் பணிகள்
2. நடுவண் குடியியல் பணிகள்

என இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

**அனைத்திந்தியப் பணிகள்**

UPSC தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவோர் மத்திய, மாநிலப்பணிகளில் தேவைக்கு ஏற்ப பணியமர்த்தப்படுவர்.

1. இந்திய ஆட்சிப் பணி (IAS)
2. இந்திய காவல் பணி (IPS)
3. இந்திய வெளியுறவுப் பணி (IFS)
4. இந்திய வனப் பணி (IFS)
5. இந்தியப் பொருளாதாரப் பணி (IES)
6. இந்திய வருவாய்ப் பணி (IRS)

இந்த ஆறு பணிச் சேவைகளும் தேர்வில் பெற்ற மதிப்பெண் தரவரிசைப்படி மத்திய, மாநில அளவில் பணி ஒதுக்கீடு செய்யப்படக்கூடியன.

**மத்திய குடியியல் பணிகள் - (குரூப்-A)**

1. இந்தியப் படைக்கலத் தொழிற்சாலைகள் பணி
2. இந்தியப் பொறியியல் பணி
3. இந்தியத் தொலைத் தொடர்புப் பணி
4. இந்திய அஞ்சல் பணி
5. இந்திய அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்புக் கணக்குமற்றும் நிதிப் பணி
6. இந்திய இரயில்வே பணி இயந்திரப் பொறியாளர்
7. இந்திய இரயில்வே பணி மின்னியல் பொறியாளர்
8. இந்திய இரயில்வே பணி சமிக்ஞைப் பொறியாளர்
9. இந்திய இரயில்வே போக்குவரத்துப் பணி
10. இந்திய இரயில்வே பணியாளர் பணி
11. இந்திய இரயில்வே வைப்பகப் பணி
12. இந்திய கணக்கு மற்றும் தணிக்கைப் பணி
13. இந்திய நில அளவியல் பணி

மேற்குறிப்பிட்ட பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் மத்தியஅரசுப் பணிக்கு மட்டுமே அனுப்பப்படுவர்.

**மாவட்ட ஆட்சித் தலைவரின் பணிப் பொறுப்புகள்**

இந்தியாவின்அனைத்து மாநிலங்களும் பல்வேறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான மாவட்ட ஆட்சித் தலைவரைமாநில அரசு நியமிக்கிறது.

ஒவ்வொரு மாவட்ட நிர்வாகமும் மாவட்ட ஆட்சித் தலைவரின்மேற்பார்வையில் சிறப்பாக இயங்குகின்றன.

**மாவட்ட ஆட்சித் தலைவரின் உயரிய பொறுப்புகள்**

மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட நீதிபதியாகவும் திகழ்கிறார்.சட்டம் ஒழுங்கு பராமரிப்பு போலீஸ் மற்றும் சிறைகளின்மேற்பார்வை, வெள்ளம், தொற்று நோய்கள், இயற்கைப் பேரழிவுகள்ஏற்படும்போது பேரிடர் மேலாண்மைக் குழுத் தலைவர், நிலவரி,வருமான வரி, கலால் வரி, பாசன பாக்கிகள் முதலியன சேகரிப்பு,மாவட்ட வங்கியாளர்கள் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மற்றும்பல முதன்மையான பொறுப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர்சிறப்பாக நடைமுறைப்படுத்துகிறார்.

**மாவட்ட வருவாய் அலுவலர் (District Revenue officer)**

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அடுத்த நிலையில் இருக்கும்பொறுப்பான பணி மாவட்ட வருவாய் அலுவலர் பணி. வருவாய்த்துறையின் அனைத்து பணிகளுக்கும் இவரே தலைவர். மாவட்டஆட்சித் தலைவர் விடுமுறையில் இருக்கும்போது மாவட்ட வருவாய்அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர் பணியையும் கூடுதலாகக் கவனிப்பார்.

**மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்**
**(District Superintendent of Police)**

மாவட்டத்தின் சட்டம் ஒழுங்கைக் காக்கும் IPS அதிகாரியான இவரைத் தமிழ்நாடரசு மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளராக நியமிக்கிறது.

**மாவட்ட முதன்மை நீதிபதி (District Chief Judge)**

மாவட்டங்களின் நீதித் துறை சார்ந்த பணிகளைக் கண்காணிக்கும் மாவட்ட முதன்மை நீதிபதியைத் தமிழ்நாடு அரசு நியமிக்கிறது.

**திட்ட அலுவலர்**

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைமைப் பொறுப்பில் திட்ட அலுவலர்கள் இருக்கிறார்கள். தமிழ்நாடரசால் நியமிக்கப்படும் இவர், மாவட்ட அளவிலான கிராம வளர்ச்சித் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துகிறார்.

**மாவட்ட வன அலுவலர் (District Forest officer)**

தமிழ்நாடு அரசு இந்திய வனப் பணி அதிகாரியை மாவட்டத்தின் வன அலுவலராகப் பணியமர்த்துகிறது.

**துணை ஆட்சியர்**

மாவட்டங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களை உள்ளடக்கிய வருவாய்க் கோட்டத்தின் தலைவராகத் துணை ஆட்சியர் அல்லது வருவாய்க் கோட்டாட்சியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அப்பணிக்கு இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் நியமிக்கப்பட்டால் அவர்கள் துணை ஆட்சியர்கள் என்றும் மற்றவர்கள் நியமிக்கப்பட்டால் வருவாய்க் கோட்டாட்சியர் என்றும் அழைக்கப்படுகிறார்.

**பல்வேறு மாவட்டப் பொறுப்பாளர்கள்**

நூலகச் செயல்பாடுகளை மாவட்ட நூலக அலுவலர் கவனிக்கிறார்.

வேலைவாய்ப்புப் பயிற்சி, போட்டித் தேர்வுப் பயிற்சி ஆகியவற்றை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கண்காணித்துச் செயல்படுத்துகிறார்.

பள்ளிக் கல்வி சார்ந்த பணிகளை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரும் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரும் செயல்படுத்துகின்றனர்.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் பணிகளை மாவட்ட விளையாட்டு அலுவலர் கவனிக்கிறார். மின்பகிர்மானம் மின் கணக்கீடு ஆகியவற்றை மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் கவனிக்கிறார்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | காட்சிஊடகத்துறையிலுள்ளவேலைவாய்ப்புகளைக் கூறுக. | K2 | CO2 | PO4 |
| 2 | தகவல் தொழில் நுட்பத்துறையும் வேலைவாய்ப்புகளும் பற்றிவிளக்கிவரைக. | K4 | CO3 | PO5 |
| 3 | அனைத்திந்தியபணிகள் குறித்துஎழுதுக. | K1 | CO4 | PO1 |
| 4 | போட்டித்தேர்வுகள் குறித்தவிழிப்புணர்வுகளைஎழுதுக. | K5 | CO5 | PO2 |
| 5 | நேர்காணல்களில் என்னஎதிர்பார்க்கிறார்கள்? | K3 | CO4 | PO3 |

| வ.எ | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping |
|---|---|---|

| ண் | | | | |
|---|---|---|---|---|
| 1 | இந்தியகுடியியல் பணிகளின் வகைகளைவிவரிக்க. | K1 | CO4 | PO4 |
| 2 | மத்தியஅரசுப் பணிப்பொறுப்புகள் பற்றிஎடுத்துரைக்க. | K4 | CO2 | PO6 |
| 3 | மாநிலஅரசுப் பணிப் பொறுப்புகளைக் குறிப்பிடுக. | K3 | CO1 | PO5 |
| 4 | இந்தியகுடியியல் பணிதேர்வின் மூன்றுபடிநிலைகளைவிளக்கியுரைக்க. | K2 | CO5 | PO6 |
| 5 | மாவட்டஆட்சித்தலைவரின் பணிப்பொறுப்புகள் குறித்துதொகுத்துரைக்க. | K4 | CO3 | PO3 |

## இயல் - 3

## போட்டித் தேர்வுகளும் விண்ணப்பிக்கும் முறைகளும்

### காலத்திற்கு ஏற்ப உங்களை நவீனப்படுத்திக்கொள்ளுங்கள்

வாழ்க்கை கற்றுக்கொடுக்கும் அனுபவம், நாம் கற்றுக்கொள்ளாததையும் பெற்றுக்கொடுக்கும். போட்டித் தேர்வுகள்கல்லூரிகளில் நடத்தப்படும் பருவத் தேர்வுகளிலிருந்து வேறுபட்டது.மழைநாளுக்குப் பிறகு மண்ணைத் துளைத்து வெளியேறும் மண்புழுவைப் போல் தன்னைத் துளைத்துத் தன் சுயத்தைக் காட்டும்விஸ்வரூப விருட்சம். அனுபவம்தான் போட்டித்தேர்வில் வெற்றி பெறல்என்பது...

வளையல் துண்டுகளை மட்டும் வைத்துக்கொண்டு வர்ணஜாலங்கள் காட்டிக்கொண்டிருக்கும் கலைடாஸ்கோப்புகளாகக் காலம்சில நேரம் நம் கண்களை ஏமாற்றிவிடுகிறது. முறையாகத் தயாரித்துஎழுதினால் போட்டித் தேர்வுகள் வெற்றி எனும் வர்ணஜாலத்தைநம்முள் காட்டத்தான் செய்யும். காலம் மாறிவருகிறது.

ஆசிரியர்களைமையமிட்ட வகுப்பறைகளும் பாடநூல்களும் இப்போது மாணவர்களைமையமிட்டதாக மாறிவிட்டன.

## தேர்வுகளின் வகைகள்

### TNPSC Group - 1

குருப் - 1 தேர்வுகள் Preliminary மற்றும் Main என்று அடுத்தடுத்துநடத்தப்படுகின்றன.

### ஆரம்பத் தேர்வு (Preliminary Exam)

குழு - 1 அலுவலர்களுக்கான தேர்வுகளில் பொது அறிவியல்,இந்திய வரலாறு, இந்தியப் புவியியல், பொருளாதாரமும்வணிகவியலும், இந்திய அரசியல், இந்திய தேசிய இயக்கங்கள்,நடப்பு நிகழ்ச்சிகள் மற்றும் மனத்திறன் தொடர்பான வினாக்கள்கேட்கப்படும்.

### Group - 1 Main Exam

ஆரம்ப நிலைத் தேர்வில் தேர்ச்சிபெற்ற பின் Main Exam எனும்முக்கியத் தேர்வுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். இரு தாள்கள்எழுத வேண்டும்.

**தாள் : 1 பாடத்திட்டம்**

1. நவீன இந்தியாவும் இந்தியக் கலாச்சாரமும்
2. உலகளாவிய மற்றும் தேசிய அளவில் நடக்கும் முக்கியநிகழ்வுகளும் நடப்பு நிகழ்ச்சிகளும்
3. புள்ளிவிபரப் பகுப்பாய்வு வரைபடங்கள்
4. சமூகப் பிரச்சனைகள் மற்றும் தற்போதைய முக்கியபிரச்சனைகள்

**தாள்: 2 பாடத்திட்டம்**

1. இந்திய அரசியல்
2. இந்தியப் பொருளாதாரமும் இந்தியப் புவியியலும்
3. இந்திய வளர்ச்சியில் அறிவியல் தொழில்நுட்பத்தின் பங்கு
4. தமிழ் மொழி, தமிழ்ச் சமூகம், தமிழ்ப் பண்பாடு மற்றும்தமிழ் மரபு.
5. தமிழ்நாட்டு ஆட்சி அமைப்பு

ஆகிய தலைப்புகளில் வினாக்கள் அமையும்.

## TNPSC Group - 2

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-2 குரூப் - 2ஏ தேர்வு

1. முதல்நிலை
2. முதன்மை

என்று இரு கட்டங்களாக நடத்தப்படும்.

குரூப் - 2 மற்றும் குரூப் - 2ஏ நிலைகளுக்கான முதல் நிலைத்தேர்வு கொள்குறி வினாக்களோடு நடைபெறும். அதில் தேர்ச்சிபெறுவோருக்கு முதன்மைத் தேர்வு நடைபெறும்.

குருப் - 2 தேர்வுக்குத் தமிழ் மொழித் தகுதித் தாள் மற்றும்பொது அறிவுத் தாள் எனும் இரு தாள்களில் முதன்மைத் தேர்வுநடத்தப்படும். பொது அறிவுத் தாள் பட்டப்படிப்பு தரத்தில்நடத்தப்படும்.

தமிழ் மொழித் தகுதித் தாள் பத்தாம் வகுப்புத் தரத்தில்நடத்தப்படும். இப்பணியிடங்களுக்கு நேர்காணல் இல்லை.

தமிழ்நாடு வனச் சார்நிலைப் பணி மற்றும் தமிழ்நாட்டு வனத் தோட்டக் கழகத்தில் உள்ள வனவர் பதவி குருப் - 2 மூலம் நிரப்பப்படுகிறது. இத்தேர்வுகளுக்கு உடல்திறன் சோதனை உண்டு.

### விளையாட்டுத் திறனும் பணி வாய்ப்பும்

உடலையும் மனத்தையும் திடப்படுத்துகிற உன்னதப் பணியைச்செய்யும் விளையாட்டு,அரசு வேலை பெறும் கருவியாக அமைகிறது.

### விளையாட்டு வீரர்களுக்கு விருதுகள்

சர்வதேச, தேசிய விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்தவர்களுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் துரோணாச்சாரியா, ராஜீவ்காந்தி கேல் ரத்னா, அர்ஜுனா, ராஷ்ட்ரிய கேல் புரோட் சஹான்,தயான் சந்த் ஆகிய உயரிய விருதுகளை வழங்கிப் பெருமைப்படுத்துகிறது.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

விளையாட்டு வீரர்களின் திறமைகளை வளர்ப்பதற்கும் ஆரோக்கியம்மற்றும் உடல் வலிமையை மேம்படுத்துவதற்கும் தமிழ்நாடு அரசின்இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைஅரும்பாடுபட்டுவருகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (Sports DevelopmentAuthority of Tamil Nadu) எனும் அமைப்பை உருவாக்கி விளையாட்டுவீரர்களை ஊக்கப்படுத்திவருகிறது.

**சிறப்பு விளையாட்டு அகாதமிகள்**

பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களின் விளையாட்டுத் திறனைக்கண்டறிந்து ஊக்கப்படுத்த தமிழ்நாட்டின் பல பகுதிகளில் தனிச்சிறப்புவாய்ந்த பயிற்சியகங்களைத் தமிழ்நாடரசு உருவாக்கியுள்ளது. உலகத்திறனாய்வு உடல் திறன் தேர்வுத் திட்டத்தைத் தொடங்கி, திறன்மிகுந்த மாணவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கிவருகிறது. தேசிய அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெறும் விளையாட்டு வீரர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை வழங்குகிறது.

**வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் - CDS**

இத்திட்டப்படி 20 வயதுக்கு உட்பட்ட தேசிய அளவிலான தங்கப் பதக்கம் பெற்றவர்கள் தேர்வு செய்யப்பட்டு, ஆண்டுக்கு ஒருவருக்கு 2 இலட்சம் வரையிலான உதவிகள் வழங்கப்படுகின்றன. விளையாட்டுச் சீருடைகள், விளையாட்டு உபகரணங்கள் வாங்குதல், வெளிநாட்டுப் பயிற்சி ஆகியன விளையாட்டு வீரர்களுக்குத் தரப்படுகின்றன.

பன்னாட்டு அளவிலான போட்டிகளுக்கு ஊக்குவிக்கும் திட்டம் MIMS பன்னாட்டு அளவில் பதக்கம் வெல்லும் திறன்மிக்க வீரர்களுக்கு ஆண்டொன்றுக்கு 12 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**சிறப்பு உதவித்தொகைத் திட்டம் - ELITE**

ஒலிம்பிக் போட்டிகளிலும் ஏனைய பன்னாட்டு அளவிலான போட்டிகளிலும் வெல்லும் திறன் கொண்ட விளையாட்டு வீரருக்கு 30 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது. Elite எனும் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் 25 பேர் இத்திட்டத்தில் நிதியுதவி பெறுகின்றனர்.

www.sdat.tn.gov.in எனும் இணையதளத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் வாரியம், தமிழ்நாடு காவல் துறையின் உதவி ஆய்வாளர்கள் மற்றும் இந்திய இராணுவத்தில் மாநில,தேசிய, பன்னாட்டு விளையாட்டு சாதனையாளர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

**தொடர்புக்கு**

உறுப்பினர் செயலர்,

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,

116 ஏ,ஈவேரா பெரியார் நெடுஞ்சாலை,

நேரு பூங்கா, சென்னை - 600 084

எனும் முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

## உதவிப் பேராசிரியருக்கான தமிழ்நாடு மாநில தகுதித் தேர்வு
## Tamil Nadu State Eligibility Test (TNSET2024)

தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் உதவிப் பேராசிரியர் பணியில் சேரப் பயன்படும் TNSET எனும் தமிழ்நாடு மாநில ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்தும் பொறுப்பு 2024ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டுகளுக்கு திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ், கணிதம் உள்ளிட்ட 43 பாடங்களுக்கான செட் தேர்வு கணினி வழியில் நடத்தப்பட உள்ளது. இத்தேர்வு குறித்த மேலதிக விபரங்களுக்கு www.msutnset.com எனும் இணையதளத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

**தேர்வுகள்**

SET தேர்வு கணினியில் நடைபெறுகிறது. குவாண்டி டேட்டிவ் ஆப்டிடியூட், லாஜிக்கல் ரீசனிங், ஜெனரல் இங்கிலீஷ், ஜெனரல் அவர்னஸ் ஆகிய வினாக்களை உள்ளடக்கிய தாளும், அந்தந்த பாடத்தின் வினாக்களைக் கொண்ட தாளும் இடம்பெறுகிறது.

## ஆசிரியர் தகுதித் தேர்வு

## (Teacher Eligibility Test)

ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் தரத்தை உறுதிப்படுத்த நடத்தப்படும் தேர்வாகும். கற்பித்தல் தரத்தை மேம்படுத்த, 2011 ஆம் ஆண்டு TET தேர்வு இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

தேசிய ஆசிரியர் கல்விக் குழும வழிகாட்டலின்படி தமிழ் நாடரசின் பள்ளிக் கல்வித் துறை இத்தேர்வுக்கான அரசாணையை வெளியிட்டது. தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம், ஆசிரியர் நியமனத்திற்கான தகுதித் தேர்வுகளை நடத்திவருகிறது. அத்தேர்வில் தேர்ச்சிபெற்றால் மட்டுமே அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர்.

**தேர்வு எழுதத் தகுதிகள்**

தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் வெளியிட்டுள்ள விதிமுறைப்படி,இளநிலை கல்வியியல் முடித்தவர்களே இத்தேர்வு எழுதலாம் என அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் இளநிலைப் பொறியியல் பட்டப்படிப்புடன் இளநிலை கல்வியியல் முடித்தவர்களும் இத்தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர்.

**தேர்வுத் தாள்கள்**

- இரண்டு தாள்களை உடைய தேர்வு இது.
- 150 வினாக்கள் கேட்கப்படும்
- சரியான விடையைத் தேர்வுசெய்யும் முறையில் ஒரு சரியான விடைக்கு ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.
- கால அளவு 180 நிமிடங்கள்.
- பொதுப் பிரிவினருக்கு 60% மதிப்பெண்களும், இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு 55% மதிப்பெண்களும் பெற்றால் தேர்ச்சிபெற்றதாய் அறிவிக்கப்படும்.

**முதல் தாள்**

1. குழந்தைகள் மேம்பாடு மற்றும் கற்பித்தல் முறை
2. மொழித் தாள் - 1 (கற்பிக்கும் மொழி)

3. மொழித் தாள் - 2 (விருப்ப மொழி)
4. கணிதம்
5. சுற்றுச்சூழலியல்

ஆகிய 5 தலைப்புகளுக்கு ஒவ்வொன்றுக்கும் 30 மதிப்பெண்கள் வினாக்கள் வழங்கப்படும்.

**இரண்டாம் தாள்**

முற்கூறிய முதல் மூன்று தலைப்புகளோடு

4. நான்காவதாக கணிதம் மற்றும் அறிவியல் (இளம் அறிவியல்பாடப் பிரிவினர்)

5. சமூக அறிவியல் (இளங்கலை பாடப் பிரிவினருக்கு)60 மதிப்பெண்கள் வினாக்கள் கேட்கப்படும்.

## மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு - CTET

RTE சட்டத்தின் பிரிவு - 23இன் துணைப் பிரிவு 1-ன் படி, ஆசிரியர் கல்விக்கான தேசிய கவுன்சில் (NCTE) ஆகஸ்ட் 23, 2010 மற்றும் 29 ஜூலை 2011 நாட்களிட்ட அறிவிப்பின்படி ஒரு நபருக்கான குறைந்தபட்ச தகுதிகளை வகுத்தது.

ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை ஆசிரியராக நியமனம் செய்ய இத்தகுதித் தேர்வைத் தேர்ச்சி பெற வேண்டும். மத்தியக்கல்வி அமைச்சகம் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வை CTETநடத்தும் பொறுப்பை மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்திடம் ஒப்படைத்துள்ளது.

**விண்ணப்பிக்க**

www.ctet.nic.inஎனும் இணையதளத்தைப் பார்க்கவும்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | ஆசிரியர் தகுதித் தேர்வுகுறித்துஎழுதுக. | K2 | CO2 | PO4 |
| 2 | போட்டித்தேர்வின் வகைகளைபட்டியலிடுக. | K4 | CO3 | PO5 |
| 3 | தகுதித் தேர்வுஎன்றால் என்ன? | K1 | CO4 | PO1 |
| 4 | நுழைவுத்தேர்வுகள் பற்றிகுறிப்பிடுக. | K5 | CO5 | PO2 |
| 5 | பணித் தேர்வுகள் பற்றிவிவரிக்க. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | போட்டித் தேர்வுகளுக்குவிண்ணப்பிக்கும் முறைகளைஎடுத்துரைக்க. | K1 | CO4 | PO4 |
| 2 | போட்டித் தேர்வுகளின் வகைகளைவிவரிக்க. | K4 | CO2 | PO6 |
| 3 | விளையாட்டுதிறனும் பணிவாய்ப்பும் குறித்துகட்டுரைவரைக. | K3 | CO1 | PO5 |
| 4 | உதவிப் பேராசிரியருக்கானதமிழ்நாடுமாநிலதகுதித் தேர்வுகுறித்துவிவரிக்க. | K2 | CO5 | PO6 |
| 5 | மத்தியஆசிரியர் தகுதித் தேர்வுகுறித்துவிவரி. | K4 | CO3 | PO3 |

## இயல் 4

## போட்டித் தேர்வுகளில் தமிழ்

## போட்டித் தேர்வுகளுக்கான பாடத்திட்டம்: ஓர் அறிமுகம்

மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு மொழிப் புலமை இன்றியமையாதது. தாயிடமிருந்து கற்கும் மொழி என்பதால் நாம் பேசும் மொழியைத் தாய் மொழி என்கிறோம். இந்திய ஆட்சிப் பணித் தேர்வு முதல் கிராம நிர்வாக அலுவலர் தேர்வு வரை தமிழ் இன்றியமையாத இடம் பிடிக்கிறது.

### UPSC தமிழ்ப் பாடத்திட்டம்

இந்தியக் குடியியல் பயிற்சித் தேர்வு முதல் கட்டத் தேர்வு,முதன்மைத் தேர்வு, நேர்காணல் என மூன்று நிலைகளில் நடத்தப்படுகிறது.

UPSC மெயின் தேர்வுக்கு ஒரு விருப்பப் பாடத்தைத் தேர்வுசெய்ய வேண்டும். ஐ.ஏ.எஸ். தேர்வின் தர வரிசையைத் தீர்மானிப்பதில் அது முக்கிய இடம் பிடிக்கிறது.

### விருப்பப் பாடம்

ஐ.ஏ.எஸ். முதன்மைத் தேர்வில் தமிழ் இலக்கியம் விருப்பப் பாடங்களில் ஒன்றாக அமைகிறது.

**தாள்: 1**

**(விடைகள் தமிழில் எழுதப்பட வேண்டும்)**

**பிரிவு -ஏ**

**பகுதி - 1 தமிழ் மொழி வரலாறு**

முக்கிய இந்திய மொழிக் குடும்பங்கள் - பொதுவாக இந்திய மொழிகளில் தமிழ், குறிப்பாக திராவிடம் - திராவிட மொழிகளின் கணக்கீடு மற்றும் விநியோகம்.

சங்க இலக்கியத்தின் மொழி, இடைக்காலத் தமிழின் மொழி,பல்லவர் காலத்து மட்டுமே-தமிழில் பெயர்ச்சொற்கள், வினைச் சொற்கள்,உரிச்சொற்கள், வினையுரிச் சொற்கள்,Tense குறிப்பான்கள் மற்றும் வழக்கு குறிப்பான்கள் பற்றிய வரலாற்று ஆய்வு.

பிற மொழிகளிலிருந்து தமிழ் பிராந்திய மற்றும் சமூக பேச்சுவழக்குகளில் சொற்களைக் கடன் வாங்குதல் - இலக்கியத்திற்கும் பேச்சுத் தமிழுக்கும் உள்ள வேறுபாடு.

**பகுதி - 2 தமிழ் இலக்கிய வரலாறு**

தொல்காப்பியம் - சங்க இலக்கியம் - அகம் புறம் என்ற பிரிவு -சங்க இலக்கியத்தின் உலகியல் பண்புகள் - ஒழுக்க இலக்கிய வளர்ச்சி - சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

**பகுதி – 3 பக்தி இலக்கியம் (ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்கள்)**

ஆழ்வார் கீர்த்தனைகளில் உள்ள மணமகள் மறைபொருள் - சிறு இலக்கிய வடிவங்கள் (துட்டு, உலா, பரணி, குறவஞ்சி)

நவீன தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கான சமூகக் காரணிகள்,நாவல், சிறுகதை மற்றும் புதுக் கவிதை - நவீன எழுத்துகளில் பல்வேறு அரசியல் சித்தாந்தங்களின் தாக்கம்.

**பிரிவு - பி**

**பகுதி - 1 தமிழ் ஆய்வுகளின் சமீபத்திய போக்குகள்**

விமர்சனத்திற்கான அணுகுமுறைகள். சமூக, உளவியல்,விருந்தோம்பல் மற்றும் ஒழுக்கவியல் -விமர்சனத்தின் பயன்பாடு. இலக்கியத்தில் உள்ள பல்வேறு நுட்பங்கள், உள்ளுறை, இறைச்சி,தொன்மம் (புராணம்), ஒத்துருவகம் (உருவகம்), அங்கதம் (நையாண்டி),மெய்ப்பாடு, பதிமம் (படம்), குறியீடு (சின்னம்), இருண்மை (தெளிவின்மை ) - ஒப்பீட்டு இலக்கியத்தின் கருத்து - ஒப்பீட்டு இலக்கியத்தின் கொள்கை.

**பகுதி - 2 தமிழில் நாட்டுப்புற இலக்கியம்**

கதைப் பாடல்கள்,பழமொழிகள் மற்றும் புதிர்கள்-தமிழ நாட்டுப்புறவியல் பற்றிய சமுகவியல் ஆய்வு - மொழிபெயர்ப்பின் பயன்கள் - தமிழ்ப் படைப்புகளைப் பிற மொழிகளில் மொழிபெயர்த்தல் தமிழில் இதழியல் வளர்ச்சி.

**பகுதி - 3 தமிழர்களின் கலாச்சாரப் பாரம்பரியம்**

காதல் மற்றும் போரின் கருத்து - அறம் பற்றிய கருத்து - பழங்காலத் தமிழர்கள் தங்கள் போர் முறைகள், நம்பிக்கைகள், சடங்குகள், ஐந்து திணைகளில் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றில் பின்பற்றப்பட்ட நெறிமுறைக் குறியீடுகள், சங்க இலக்கியத்திற்குப் பிந்தைய கலாச்சார மாற்றங்கள், இடைக்காலத்தில் (ஜைன மற்றும் பௌத்தம்) கலாச்சார இணைவு-காலங்காலமாய் கலை மற்றும் கட்டடக் கலை வளர்ச்சி (பல்லவர்கள், பிற்காலச் சோழர்கள் மற்றும் நாயக்கர்கள்) தமிழ்ச் சமூகத்தில்

பல்வேறு அரசியல், சமூக, மத மற்றும் கலாச்சார இயக்கங்களின் தாக்கம் - சமகாலத் தமிழ்ச் சமூகத்தின் கலாச்சார மாற்றத்தில் வெகுஜன ஊடகங்களின் பங்கு.

## தாள்-2

## (விடைகள் தமிழில் எழுதப்பட வேண்டும்)

**பகுதி - 1 பண்டைய இலக்கியம்**

1. குறுந்தொகை (1-25 கவிதைகள்)
2. புறநானூறு (182-200 கவிதைகள்)
3. திருக்குறள் பொருட்பால் - அரசியலும் அமைச்சியலும்(இறை மாட்சி முதல் அவையஞ்சாமை வரை)

**பகுதி - 2 காப்பிய இலக்கியம்**

1. சிலப்பதிகாரம் - மதுரைக் காண்டம் மட்டும்.
2. கம்பராமாயணம் - கும்பகருணன் வதைப் படலம்

**பகுதி - 3 பக்தி இலக்கியம்**

1. திருவாசகம் (நீத்தல் விண்ணப்பம்)
2. திருப்பாவை (முழு உரை)

**நவீன இலக்கியம்**

**பகுதி - 1 கவிதை**

1. பாரதியார் - கண்ணன் பாட்டு
2. பாரதிதாசன் - குடும்ப விளக்கு
3. நா. காமராசன் - கருப்பு மலர்கள்

**உரைநடை**

1. மு. வரதராசனார் - அறமும் அரசியலும்
2. சி.என்.அண்ணாதுரை - ஏ! தாழ்ந்த தமிழகமே

**பகுதி - 2 நாவல், சிறுகதை மற்றும் நாடகம்**

1. அகிலன் சித்திரப் பாவை
2. ஜெயகாந்தன் - குருபீடம்

3. சோ - யாருக்கும் வெட்கமில்லை

**பகுதி - 3 நாட்டுப்புற இலக்கியம்**

1. முத்துப் பட்டன் கதை - திருத்தியவர் நா.வானமாமலை (வெளியீடு : மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்)
2. மலையருவி - தொகுத்தவர் - கி.வா.ஜகந்நாதன (வெளியீடு சரஸ்வதி மகால், தஞ்சாவூர்)

**இந்திய குடிமைப் பயிற்சித் தேர்வு தமிழ்ப்பாடம் வினா அமைப்பு இலக்கியம்**

காலம்: 3 மணி மொத்த மதிப்பெண்கள்: 300

தேர்வர்களின் கவனத்திற்கு

இரு பிரிவுகளில் எட்டு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அதிலிருந்து ஐந்து வினாக்களுக்கு மாணவர்கள் விடையளிக்க வேண்டும்.

வினாக்கள் ஒன்று முதல் ஐந்து வரை கட்டாயமாக விடையளிக்க வேண்டும். மற்ற மூன்று -வினாக்களில் ஒரு வினாவுக்கு விடையளிக்க வேண்டும். சொற்கள் குறித்த அளவில் இருத்தல் வேண்டும். விடைகளைவரிசைப்படியே எழுத வேண்டும்.

## SECTION-A

**முதல் வினாவில் 5 உட்பிரிவு வினாக்கள் கேட்கப்படும் 10 x 5 = 50**

இரண்டாம் வினாவில் 3 உட்பிரிவு வினாக்கள் கேட்கப்படும். 200 சொற்களில் விடை தர வேண்டும். முதலிரு வினாக்களுக்கு15 மதிப்பெண்களும் மூன்றாம் வினாவுக்கு 20 மதிப்பெண்களும் வழங்கப்படும்.

மூன்றாம் நான்காம் வினாக்களுக்கும் அதே போல் மதிப்பெண்கள்வழங்கப்படும்.

## SECTION-B

5 முதல் வினாவுக்கு150 சொற்களில் விடை தர வேண்டும். உட்பிரிவில் 5 வினாக்கள் கேட்கப்படும். ஒரு வினாவுக்குப் 10 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 50 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

6, 7, 8 ஆம் வினாக்களில் கேட்கப்படும் உட்பிரிவு வினாக்கள் மூன்றில் முதல் இரு வினாக்களுக்கு 15 மதிப்பெண்களும் மூன்றாம் வினாவுக்கு 20 மதிப்பெண்ணும் வழங்கப்படுகிறது.

## இந்திய குடிமைப் பயிற்சித் தேர்வுத் தமிழ்ப்பாடம் வினா அமைப்பு இலக்கியம்

காலம் : 3 மணி மதிப்பெண்கள்: 300

**தாள் - 1**

**தேர்வர்களின் கவனத்திற்கு**

1. விடையளிக்கும் முன் மிகக் கவனமாக வினாக்களை வாசித்துப் புரிந்து கொள்ளவும்.
2. மொத்தம் எட்டு வினாக்கள் இரு பகுதிகளாகக் கேட்கப்பட்டுள்ளன.
3. ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும்.
4. வினா ஒன்று முதல் ஐந்து வரை கட்டாயமாக விடை தர வேண்டும். அடுத்துள்ள மூன்று வினாக்களில் ஒரு வினாவுக்குக் கட்டாயம் பதில் எழுத வேண்டும்.
5. விடைகள் தமிழில் இருக்க வேண்டும்.
6. குறித்த சொற்களுக்குள் விடைகள் எழுதப்பட வேண்டும்.

## Section - A

**1. பின்வரும் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்கங்ளுக்கு மிகாமல் சிறு குறிப்புஎழுதுக. (10x5=50)**

(அ) தமிழ் ஏன் செம்மொழி என அழைக்கப்படுகிறது.?

(ஆ) பல்லவர் காலத் தமிழ்

(இ) தமிழ்ப் பேச்சு வழக்கு ஒவ்வொரு பகுதி சார்ந்து ஏன் மாறுகிறது?

(ஈ) சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ள கலைகள் எவை?

(உ) பக்தி இலக்கியங்கள் தோன்றக் காரணிகள் எவை?

**2. தெரிவு செய்யும் வினா ஒவ்வொன்றிற்கும் நான்கு பக்கங்களுக்கு மிகாமல்விடை எழுதுக.**

(அ) திராவிட மொழிகளின் தாய் தமிழ் தான் எனும் கருத்தை ஆராய்க.

(ஆ) சங்க காலச் செய்யுள் மொழி குறித்து நும் கருத்தைப் பதிவுசெய்க.

(இ) கைக்கிளை, பெருந்திணை - அகத்திணைகள், புறத்திணைகள்இரண்டிலும் ஏன் இடம் பெறுகிறது?

(ஈ) சங்கப் பாடல்களின் திணை, துறைகள் பகுப்பு குறித்து எழுதுக.

(உ) சிற்றிலக்கியங்களின் தோற்றம் குறித்து எழுதுக.

(ஊ) உரைநடை இலக்கியத்தின் தந்தை யார்? விளக்குக.

## Section - B

**3. பின்வரும் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்புவரைக.**

(அ) இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர்

(ஆ)உருவகம்

(இ) உரையாசிரியர்கள் திறனாய்வாளர்களா?.

(ஈ) நாட்டார் பழமொழிகளில் குறியீடு

(உ) சமூக இயக்கங்களும் சமூக மாற்றமும்

**4. தெரிவு செய்யும் வினா ஒவ்வொன்றிற்கும் நான்கு பக்கங்களில்விடையளிக்க.**

(அ) தமிழாய்வின் அண்மைக் காலப் போக்குகள்

(ஆ) ஒப்பிலக்கியத்தின் பயன் யாது?

(இ) தமிழ் இதழியலின் முன்னோடிகள் யார்?

(ஈ)சமூகவியல் நோக்கில் நாட்டார் இலக்கியங்களை ஆராய்க.

(உ) சங்க கால ஐந்திணைக் கோட்பாடு குறித்த நும் கருத்தைப்பதிவு செய்க.

(ஊ) நீதி இலக்கியக் குரல் சங்க இலக்கியத்தின் மாற்றுக் குரலா?விளக்குக.

## தமிழ் வினாத்தாள் - சில மாதிரி வினாக்கள்

காலம்: 3 மணி மதிப்பெண்கள் : 300

### Section - A

**1. பின்வரும் ஒவ்வொரு வாக்கியம் குறித்தும் 300 சொற்களில் சிறுகட்டுரையாக வரைக.** **50x2=100**

அ) உண்மையான சொற்கள் அழகாக இருக்காது, அழகான சொற்கள் உண்மையாக இருக்காது.

ஆ) நடக்கத் தயாராக இருந்தால் பாதை தானே உருவாகும்.

இரு விடைகளுக்கு 50 + 50 = 100 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

2. ஒரு பத்தி தரப்பட்டிருக்கும் அதில் இருக்கும் கருத்தைஉள்வாங்க வேண்டும். அதிலிருந்து ஆறு வினாக்கள் கேட்கப்படும்.ஒரு விடைக்கு 10 மதிப்பெண்கள் வீதமாக 6x10=60 மதிப்பெண்கள்வழங்கப்படும்.

3. இரண்டு பக்கத்திற்கு சிறு கட்டுரை தரப்படும். அதைக்கவனமாகப் படித்து அதன் கருத்துச் சுருக்கத்தை மூன்றில் ஒரு பகுதியாகச்சுருக்கி எழுத வேண்டும். குறித்த சொல் அளவுக்குள் சுருக்கிஎழுதாவிட்டால் மதிப்பெண் குறையும். தலைப்பு தர

வேண்டியதில்லை.திருந்தாப் படி, திருந்திய படிகளோடு சரியாக எழுதினால்60 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

4. ஓர் ஆங்கிலப் பத்தி தரப்படும். அதைத் தமிழில் மொழிபெயர்த்துஎழுத வேண்டும். சரியாக மொழிபெயர்த்தால் 20 மதிப்பெண்கள்வழங்கப்படும்.

5. தமிழில் ஒரு பத்தி தரப்படும். அதை ஆங்கிலத்தில்மொழிபெயர்த்து எழுத வேண்டும். சரியான மொழிபெயர்ப்புக்கு20 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

6. இவ்வினா தேர்வர்களின் தமிழ் இலக்கண அறிவைப்பரிசோதிப்பதாய் அமையும்.

ஒரு வினாவுக்கு 5 மதிப்பெண்கள் வீதம் 5x8=40 மதிப்பெண்கள்வழங்கப்படும்.

**(அ) கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக** (1x5=5)

1. உண்மை எப்போதும்
2. தாய்மை என்பது
3. தமிழ் என்
4. சாரை சாரையாய்
5. ஏன்?எதற்கு? எப்படி? எதனால்?

**(ஆ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக** **(1x 5=5)**

1. செந்தமிழ்
2. தீந்தமிழ்
3. அன்னைத் தமிழ்
4. நற்றமிழ்
5. முத்தமிழ்

**(இ) கீழ்க்காணும் சொற்களுக்கு எதிர்ச்சொற்கள் எழுதுக.** **(1x 5=5)**

1. 1.இகழ்ச்சி
2. மென்மை
3. குளிர்ச்சி
4. கற்காலம்
5. வெளிச்சம்

**(ஈ) கீழ்க்காணும் சொற்களை அகர வரிசைப்படி எழுதுக** **(1x 5=5)**

6. ஆட்டம், உடுக்கை, அண்ணன், ஊசல்
7. கற்பி, கல், கயமை, கடுகு
8. மத்தளம், மகுடி, மாமன், மாமை
9. கப்பம், கபடம், கத்தரி, கச்சை
10. படம், பாட்டு, பரதம், பக்கம்

**(உ) கீழ்க்காணும் சொற்களின் பிழைகளை நீக்கி எழுதுக.** **(1x 5=5)**

1. மனத்தில்
2. சுவற்றில்
3. சித்தரிப்பு
4. வாழ்த்துக்கள்
5. வளமுடன்

**(ஊ) கீழ்க்காணும் சொற்களுக்கு இணையான பொருளுடைய சொற்களை எழுதுக.**
**(1x 5=5)**

1. புதுமை
2. நாற்றம்
3. நூல்
4. சொல்லுதல்
5. ஔடதம்

**(எ) கீழ்க்காணும் வாக்கியங்களை எதிர்மறையில் அமைத்து எழுதுக.** **(1x5=5)**

1. இதை உன்னால் முடிக்க முடியும்
2. அவனை அங்கு காணலாம்
3. அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள்.
4. நீ செய்யும் பணி சிறந்த பணி
5. பனி பெய்து கொண்டிருக்கிறது.

**(ஏ) கீழ்க்காணும் இரண்டனுள் ஒன்று குறித்து ஐந்து வாக்கியங்கள் குறித்து எழுதுக.**
**(2.5x2=5)**

1. எழுத்து

2. வாசிப்பு

## மாதிரி தமிழ் இலக்கிய வினாக்கள்

**சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. திருக்குற்றாலக் குறவஞ்சியை இயற்றியவர்

அ) சேக்கிழார்

ஆ) வள்ளலார்

இ) கம்பர்

ஈ) திரிகூடராசப்பக் கவிராயர்

2. மகாகவி பாரதி பயின்ற பள்ளி எங்கே உள்ளது?

அ) மதுரை

ஆ) திருச்சி

இ) திருநெல்வேலி

ஈ) சென்னை

3. தமிழ்ச் சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் எங்கே வாழ்ந்தார்?

அ) வண்ணார்ப்பேட்டை

ஆ) ஆலங்குளம்

இ) திருவனந்தபுரம்

ஈ) திருப்பாதிரிப்புலியூர்

4. எழுத்தாளர் வண்ணதாசன் எழுதிய கதை

அ) ஓர் உல்லாசப்பயணம்

ஆ) காலம்

இ) இது மிஷின் யுகம்

ஈ) காஞ்சனை

5. எழுத்தாளர் கி.ரா. பிறந்த ஊர் எது?

அ) இடைசெவல்

ஆ) தாதன்குளம்

இ) மதுரை

ஈ) விளாத்திகுளம்

6. திருநெல்வேலி சரித்திரம் எனும் நூலை எழுதியவர் யார்?

அ) ஜி.யூ.போப்

ஆ) கால்டுவெல்

இ) வீரமாமுனிவர்

ஈ) தத்துவ போதகர்

7. அஞ்சலட்டையில் கடித இலக்கியம் படைத்தவர் யார்?

அ) தொ.மு.சி.

ஆ) தி.க.சி.

இ) வ.உ.சி.

ஈ) உ. வே.சா.

8. வேணுவனம் என அழைக்கப்பட்ட ஊர் எது?

அ) திருமங்கலம்

ஆ) திருநெல்வேலி

9. செக்கிழுத்த செம்மல் யார்?

அ) வ.உ.சி.

ஆ) டி.கே.சி.

இ) சுப்பிரமணிய சிவா

ஈ) திலகர்

10. பேராசிரியர் தொ.ப. எழுதிய நூல் எது?

அ) பண்பாட்டு அசைவுகள்

ஆ) வள்ளுவம்

இ) வேள்பாரி

ஈ) மலர்

11. பரமார்த்த குரு கதையை எழுதியவர் யார்?

அ) என்னயினாப் புலவர்

ஆ) வீரமாமுனிவர்

இ) கம்பர்

ஈ) கபிலர்

12. பாப்பா பாட்டு எழுதியவர் யார்?

அ) பாவேந்தர்

ஆ) பாரதியார்

இ) கவிமணி

ஈ) இளங்கோ

13. முதல் தமிழ்ச் சிறுகதையை எழுதியவர் யார்?

அ) வ.வே.சு.ஐயர்

ஆ) உ.வே.சா

இ) பிரபஞ்சன்

ஈ) ந.பிச்சமூர்த்தி

14. எழுத்தாளர் வல்லிக்கண்ணன் வாழ்ந்த ஊர் எது?

அ) ராஜவல்லிபுரம்

ஆ) வள்ளியூர்

இ) துறையூர்

ஈ) மதுரை

15. ஜல்லிக்கட்டு எனும் பண்பாட்டு நிகழ்வை முன்னிறுத்திசி.சு.செல்லப்பா எழுதிய நாவலின் பெயர்

அ) காளை

ஆ) வாடிவாசல்

இ) ஏறுதழுவுதல்

ஈ) வீரம்

16. சதாவதானி என்று அழைக்கப்படுபவர்

அ) செய்குத்தம்பிப் பாவலர்

ஆ) உமறுப்புலவர்

இ) காசிம் புலவர்

ஈ) வண்ணக் களஞ்சியப் புலவர்

17. திருமுருகாற்றுப் படையின் ஆசிரியர் யார்?

அ) கபிலர்

ஆ) நக்கீரர்

இ) பரணர்

ஈ) இளங்கோ

18. ஆசியாவின் பெரிய ஈரடுக்கு மேம்பாலம் எங்கே உள்ளது?

அ) திருநெல்வேலி

ஆ) பெரம்பலூர்

இ) தஞ்சாவூர்

ஈ) நாகர்கோவில்

19. கலிங்கத்துப்பரணியின் ஆசிரியர்

அ) சேக்கிழார்

ஆ) ஜெயங்கொண்டார்

இ) நக்கீரர்

ஈ) ஔவையார்

20. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் ஆசிரியர் யார்?

அ) பாம்பாட்டி சித்தர்

ஆ) குமரகுருபரர்

இ) ஜவ்வாதுப் புலவர்

ஈ) சிங்காரவேலர்

21. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் பாடிய புலவர் யார்?

அ) செந்தூரான்

ஆ) பகழிக்கூத்தர்

இ) குமரகுருபரர்

ஈ) காளமேகம்

22. பிள்ளைத்தமிழின் வகைகள் எத்தனை?

அ) 2

ஆ) 3

இ) 4

ஈ) 5

23. தாமிரபரணி,சிற்றாறு, கோதண்டராமநதி எனும் மூன்று நதிகளின் கூடலே

அ) முத்தமிழ்

ஆ) முக்கூடல்

இ) முக்கடல்

ஈ) முச்சங்கம்

24. பஞ்ச சபைகளில் திருநெல்வேலி

அ) பொற்சபை

ஆ) இரத்னசபை

இ) வெள்ளி சபை

ஈ) தாமிரசபை

25. வள்ளலார் என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) சிகாமணி

ஆ) இராமலிங்க அடிகளார்

இ) மாசாத்தியார்

ஈ) வெள்ளிவீதியார்

26. குடும்ப விளக்கின் ஆசிரியர்

அ) பாரதிதாசன்

ஆ) கண்ணதாசன்

இ) பாரதி

ஈ) கவிமணி

27. சாயர்புரத்தில் வாழ்ந்த தமிழறிஞர் யார்?

அ) இரேனியஸ் அடிகள்

ஆ) ஜி.யூ.போப்

இ) கால்டுவெல்

ஈ) வீரமாமுனிவர்

28. "மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா" என்று கூறியவர் யார்?

அ) புவிமணி

ஆ) கவிமணி

இ) இறையருட்கவி மணி

ஈ) பாரதியார்

29. கிறித்தவக் கம்பர் என அழைக்கப்பட்டவர் யார்?

அ) கண்ணதாசன்

ஆ) வில்லியம்

இ) ஷேக்ஸ்பியர்

ஈ) ஹெச்.ஏ.கிருஷ்ணபிள்ளை

30. சிலம்பும் மேகலையும்

அ) சிற்றிலக்கியங்கள்

ஆ) இரட்டைக் காப்பியங்கள்

இ) பக்தி இலக்கியங்கள்

ஈ) நீதி இலக்கியங்கள்

31. தமிழ் விடு தூது எவ்வகை யாப்பில் எழுதப்பட்ட இலக்கியம்?

அ) ஆசிரியப்பா

ஆ) கலிவெண்பா

இ) விருத்தப்பா

ஈ) கலிப்பா

32. சீறாப்புராணத்தை இயற்றியவர்

(அ) காசீம் புலவர்

(ஆ) வண்ணக் களஞ்சியப் புலவர்

இ) உமறுப் புலவர்

ஈ) சவ்வாதுப் புலவர்

33. ஏட்டில் எழுதாக் கவிதைகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

அ) மரபுக் கவிதைகள்

ஆ) நாட்டுப்புறப் பாடல்கள்

இ) புதுக்கவிதைகள்

ஈ) வசன கவிதைகள்

34. “யாதும் ஊரே, யாவரும் கேளிர்” - இது யார் கூற்று?

அ) காக்கைப்பாடினியார்

ஆ) கணியன் பூங்குன்றனார்

இ) வள்ளுவர்

ஈ) வள்ளலார்

35. நன்னூலை இயற்றியவர் யார்?

அ) தொல்காப்பியர்

ஆ) பவணந்தி முனிவர்

இ) அகத்தியர்

ஈ) கபிலர்

36. சார்பெழுத்துகள் எத்தனை?

அ) 7

ஆ) 8

இ) 10

ஈ) 5

37. பெயர்ச்சொல்லின் வகைகள் எத்தனை?

அ) 3

ஆ) 4

இ) 6

ஈ) 5

38. காளை வந்தான் - என்பது

அ) பண்புத்தொகை

ஆ) ஆகுபெயர்

இ உரிச்சொல்

ஈ) வினைத்தொகை

39. திருப்பாவைப் பாடல்களின் எண்ணிக்கை.

(அ) 20

ஆ) 30

இ) 40

ஈ) 50

40. முக்கூடற்பள்ளு இலக்கியத்தின் பேச்சு வழக்கு

அ) திருநெல்வேலி

ஆ) கொங்கு

இ) நாகர்கோவில்

ஈ) விருதுநகர்

41. முதல் தூது இலக்கிய நூல் எது?

அ) தமிழ்விடு தூது

ஆ) நெஞ்சு விடு தூது

இ) பறவை விடு தூது

ஈ) விரலி விடு தூது

42. சாகித்ய அகாதெமி விருது பெற்ற வண்ணதாசனின் சிறுகதைத் தொகுப்பு

அ) சமவெளி

ஆ) மனுசா மனுசா

இ) ஒரு சிறு சை

ஈ) கலைக்க முடியாத ஒப்பனைகள்

43. 2023 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூலின் பெயர்

அ) காலா பாணி

ஆ) சஞ்சாரம்

இ) சூல்

ஈ) நீர்வழிப் படூஉம்

44. 99 மலர்களைச் சொன்ன தமிழிலக்கிய நூல் எது?

அ) குறிஞ்சிப்பாட்டு

ஆ) முல்லைப்பாட்டு

இ) நற்றிணை

ஈ) புறநானூறு

45. உத்தர வேதம் எது?

அ) நாலடியார்

ஆ) திருக்குறள்-

இ) இன்னா நாற்பது

ஈ) இனியவை நாற்பது

46. தமிழ்நாட்டின் பெர்னாட்ஷா

அ) பேரறிஞர் அண்ணா

ஆ) திரு.வி.க

இ) மறைமலையடிகள்

ஈ) மோசிகீரனார்

47. இந்தியா இதழின் ஆசிரியர் யார்?

அ) பாரதிதாசன்

ஆ) பாரதியார்

இ சுரதா

ஈ) மருதகாசி

48. ஐந்திலக்கணம் கூறும் தமிழ் நூல் எது?

அ) வீரசோழியம்

ஆ) தண்டியலங்காரம்

இ) அகத்தியம்

ஈ) சிவஞான மாபாடியம்

49. குட்டித் தொல்காப்பியம் என்று பெயர் பெற்ற நூல்

அ) தொன்னூல் விளக்கம்

ஆ) சதுரகராதி

இ) மலரும் மாலையும்

ஈ) பூ இதழ்

50. காந்தியக் கவிஞர் யார்?

அ) நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

ஆ) கவிக்கோ

இ) பூரிக்கோ

ஈ)ஔவை

51. சொல்லின் செல்வர் யார்?

அ) ரா.பி.சேதுப்பிள்ளை

ஆ) ஒட்டக்கூத்தர்

இ) கபிலர்

ஈ) பரணர்

51. திருப்புகழ் பாடிய புலவர்

அ) அருணகிரிநாதர்

ஆ) கம்பர்

இ) ஒட்டக்கூத்தர்

ஈ) பரணர்

52. சங்கத் தமிழ் மூன்றும் தா என்று பாடியவர் யார்?

அ) கம்பர்

ஆ) ஔவையார்

இ) நச்சினார்க்கினியர்

ஈ) பரணர்

53. அறிவை விரிவு செய் அகண்டமாக்கு - இது யார் கூற்று

அ) பாரதி

ஆ) பாரதிதாசன்

இ) கவிமணி

ஈ) நம்பி

54. வைகறை மேகங்கள் யாருடைய முதல் கவிதைத் தொகுப்பு?

அ) மு.மேத்தா

ஆ) வைரமுத்து

இ) கவிக்கோ

ஈ) பரணர்

55. மனோகரா நாடகத்தின் ஆசிரியர்

அ) பம்மல் சம்பந்த முதலியார்

ஆ) மு.இராமசாமி

இ) பிரசன்னா ராமசாமி

ஈ) பாவண்ணன்

56. தமிழ்ப் புதுக்கவிதை முன்னோடி யார்?

அ) வால்ட் விட்மன்

ஆ) நா.பிச்சமூர்த்தி

இ) கு.ப.ரா

ஈ) பாரதி

57. திருவிளையாடற்புராணத்தின் ஆசிரியர்

அ) பரஞ்சோதி முனிவர்

ஆ) கம்பர்

இ) பரணர்

ஈ) கபிலர்

58. திருக்குறளின் புகழ் பாடும் நூல் எது?

அ) திருவள்ளுவமாலை

ஆ) குறுந்தொகை

இ) புறநானூறு

ஈ) கலித்தொகை

59. தொண்டர் சீர் பரவுவார் யார்?

அ) பாரதி

ஆ) சேக்கிழார்

இ) கபிலர்

ஈ) பரணர்

60. தமிழ்த்தாய் வாழ்த்தின் ஆசிரியர் யார்?

அ) சுந்தரனார்

ஆ) பாவாணர்

இ) கம்பர்

ஈ) ஔவை

**வினாக்கள்**

1. போட்டித் தேர்வுகளுக்கான பாடத்திட்டங்களை அறிமுகம் செய்க.
2. தேர்வு முகமைகளால் வரையறுக்கப்பட்ட தமிழுக்கான பாடத்திட்டங்கள் யாவை?
3. தகுதித் தேர்வுகளுக்கான பாடத்திட்டங்களை வரிசைப்படுத்துக.
4. ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான பாடத்திட்டங்கள் யாவை?
5. ஐ.ஏ.எஸ் முதன்மைத் தேர்வின் தமிழ்ப் பாடத்திட்டங்களை குறிப்பிடுக.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | போட்டித்தேர்வுக்கானபாடத்திட்டங்களைஅறிமுகம் செய்க. | K2 | CO2 | PO4 |
| 2 | தேர்வுமுகமைகளால் வரையறுக்கப்பட்டதமிழுக்கானபாடத்திட்டங்கள் யாவை? | K4 | CO3 | PO5 |
| 3 | தகுதித் தேர்வுக்கானபாடத்திட்டங்களைவரிசைப்படுத்துக. | K1 | CO4 | PO1 |
| 4 | ஆசிரியர் தகுதித் தேர்வுக்கானபாடத்திட்டங்கள் யாவை? | K5 | CO5 | PO2 |
| 5 | ஐ.ஏ.எஸ்.முதன்மைத் தேர்வில் தமிழ்ப் பாடத்திட்டங்களைகுறிப்பிடுக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | போட்டித்தேர்வுகளில் தமிழின் பங்குகுறித்துவிவரிக்க. | K3 | CO4 | PO4 |
| 2 | தமிழ் இலக்கியவரலாறின் அவசியம் குறித்துஎடுத்துரைக்க. | K4 | CO2 | PO6 |
| 3 | ஆசிரியர் தகுதித் தேர்வுபாடத்திட்டங்களைவிரிவாகவிளக்குக. | K1 | CO1 | PO5 |
| 4 | இந்தியகுடியியல் பணியில் தமிழ் பாடத்திட்டம் குறித்துவிவரி. | K5 | CO5 | PO6 |
| 5 | தகுதித் தேர்வுக்கானபாடத்திட்டங்கள் குறித்துகட்டுரைவரைக. | K6 | CO3 | PO3 |

# இயல் 5

## போட்டித் தேர்வுகளும் பயிற்சி மையங்களும்
## வினாத்தாள் அமைப்பு முறைகளும் விடையளிக்கும் முறைகளும்

### போட்டித் தேர்வுகளின் வினாத்தாள் அமைப்பு

மத்திய மாநில அரசின் எந்தத் தேர்வு வாரியம் என்றாலும் வினா அமைப்பாளர்களை மிகக் கவனமாகத் தேர்வு செய்கின்றனர். 25 ஆண்டுகள் பணியனுபவம் மிக்க துறை சார்ந்த பேராசிரியர்களே இப்பணியைச் செய்கின்றனர். இப்பணி தனி நபர்களால் செய்யப்படுவதல்ல,தேர்ந்த ஒரு குழு இப்பணியைச் செய்கிறது. தேர்வுக்கு ஓராண்டுக்கு முன்னரே இப்பணிகள் தொடங்கிவிடுகின்றன. தமிழ்நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள 25 ஆண்டுகள் பணியனுபவம் மிக்க பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்களே இவ்வினா அமைப்புப் பணியைச் செய்கின்றனர்.

எந்த போட்டித் தேர்வுப் பயிற்சி மையத்திலும் தான் வகுப்பெடுக்கவில்லை எனும் உறுதிமொழியை வினா தயாரிக்கும் ஆசிரியர் தருகிறார். வினாத்தாள் பணி இரகசியப் பணி, அதன் இரகசியம் காக்கப்பட வேண்டும் என்பதில் அரசுப் போட்டித் தேர்வு நடத்தும் அமைப்புகள் மிக உறுதியாக இருக்கின்றன. வினா தயாரிக்கும் ஆசிரியர்களுக்கு மாற்றுப் பணி தரப்பட்டு ஒரு வாரம் வரை இப்பணிகள் தேர்வு வாரிய அலுவலகத்தில் நடக்கின்றன.

### வினத்தாள் அமைப்பு முறைகள்

### போட்டித் தேர்வு வினாக்களை

1. கொள்குறி வினாக்கள்
2. விரிவாக விடை எழுதும் வினாக்கள்

என இரு வகையாகப் பகுக்கலாம்.

## கொள்குறி வினாக்கள்

கொள்குறி வினா முறை போட்டித் தேர்வுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு வினா கேட்கப்பட்டு அதன் கீழ் நான்கு பதில்கள் தரப்படும். நான்கில் ஒரு விடை மட்டுமே சரியான விடை. மற்ற மூன்றும் தவறானவை. அந்த மூன்றில் இரு தவறான விடைகள் சரியான விடையைப் போன்றே மாயத் தோற்றம் கொண்டது. மற்றொரு விடை, பார்த்தவுடன் தவறான விடை என்று உணர்த்தும் விடை. கொள் குறி வினாவுக்கான விடையைத் தெளிவு இருந்தால் மட்டுமே தேர்வரால் உடனே முடிவுசெய்ய முடியும்.

**சான்றாக**

மண நூல் என்று அழைக்கப்பெறும் நூல் எது? எனும் வினாவுக்கு அ) கல்யாணச் சிந்து ஆ) திருமணப் பிரபந்தம் இ) சீவகசிந்தாமணி ஈ) மணிமேகலை எனும் நான்கு பதில்கள் தரப்பட்டுள்ளன. கல்யாணச் சிந்து, திருமணப் பிரபந்தம் என்ற நூல் வகைத் தமிழிலக்கியத்தில் கிடையாது. மண நூல் என்று வினா கேட்கப்பட்டதால் தேர்வர்கள் குழம்பிப் போய் கல்யாணச் சிந்தையோ, திருமண பிரபந்தத்தையோ தவறாகத் தேர்வு செய்வர். ஆனால் சரியான பதில், சீவகசிந்தாமணி தான். நன்றாகப் பயின்ற தேர்வர் முதல் இரு விடைகள் தவறானவை என்று முடிவு செய்து விலக்கினாலும் நான்காம் பதில் மணிமேகலையில் குழப்பம் ஏற்படும் வகையில் சிந்திப்பார். ஐம்பெரும் காப்பியங்களில் மண நூல் என்பது சீவகசிந்தாமணியா ? மணிமேகலையா? என்ற குழப்பம் வரும். இலக்கிய வரலாற்றைத் தெளிவாக வரிக்கு வரி படித்த தேர்வர்களால் சரியான பதிலை ஒரு வினாடியில் கண்டுபிடித்துவிட முடிகிறது.

## எவ்வாறு தயாரிப்பது?

கொள்குறி வினா தயாரிப்பை ஒரு நாளில் முடித்துவிட முடியாது. தமிழ்த் தொண்டாற்றிய அயல் நாட்டார் என்ற தலைப்பு பாடத்திட்டத்தில் இருந்தால், முதலில் ஜி.யூ.போப், வீரமாமுனிவர், ஆறுமுக நாவலர்,தத்துவ போதகர், கால்டுவெல், சீகன்பால்க் என்று பெயர்ப் பட்டியல் முதலில் தயாரிக்க வேண்டும். அதன்பின் அவர்கள் எந்நாட்டிலிருந்து வந்தவர்கள், தமிழுக்கு எவ்வகையில் தொண்டாற்றினார்கள் என்று குறித்து வைத்துக்கொண்டால் கொள்குறி வினாவுக்கும் விடை தரலாம். விரிவான விடையாகவும் எழுதலாம். கொள்குறி வினா வகையில் ஆண்டுகள், பெயர்கள், முன்னடைச் சொற்கள், பாடல் வரிகள்,நூல்,நூலாசிரியர், சிறப்புப் பெயர்கள்

என்று தனித்தனியே எழுதி வைத்து அடிக்கடி திருப்புதல் செய்தால் எளிமையாகத் தேர்வில் வெற்றிபெற முடியும்.

**தரமான நூல்கள்**

சாகித்ய அகாதெமி வெளியிட்டுள்ள டாக்டர் மு.வரதராசனார் இலக்கிய வரலாற்று நூலை அடிக்கோடிட்டு கவனமாகப் படிக்க வேண்டும்.

**எப்படி வினாக்கள் கேட்கப்படும்?**

பெரிய கட்டுரை வினாக்களைப் படிக்கும்போதும் இதில் எப்படியெல்லாம் கொள்குறி வினாக்கள் கேட்கலாம் என மனத்தில் நிறுத்திப் படிக்க வேண்டும். பாடத்திட்டத்தை ஓர் உட்கூறுகூட விடாமல் முழுமையாகத் தயார் செய்ய வேண்டும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய புதிய தமிழ்ப் பாடத்திட்டத்தில் உள்ள இராவண காவியம், நாட்டுப்புறக் கலைகள்,சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர், ம.பொ.சிவஞானம் போன்றோர் குறித்த செய்திகளை நுட்பமாகக் கற்றல் வேண்டும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையப் போட்டித் தேர்வுகளில் கேட்கப்பட்ட வினாக்களும் அதன் விடைகளும் தரப்பட்டுள்ளன.

## மாதிரி கொள்குறி தமிழ் வினாக்கள்

**அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை தருக. (30x1=30)**

1. “நான் மெல்ல வருகிறேன்” இதில் வந்துள்ள மெல்ல என்புத என்ன?

அ) கூட்டுவினையடை

ஆ) தனிவினையடை

இ) எச்ச அடை

ஈ) தனிப்பெயரடை

2. “வண்ணம் வண்ணமான ஆடைகள்” இங்கு வண்ணம் வண்ணமான என்பது என்ன?

அ) தனிப்பெயரடை

ஆ) கூட்டுப்பெயரடை

இ) அடுக்குப்பெயரடை

ஈ) கூட்டுவினையடை

3. சாரியை பெற்றுப் புணர்ந்துள்ள சொல் எது?

அ) மரமுக்கு

ஆ) சிவணி

இ) புளியங்காய்

ஈ) கருமேகம்

4. என் மன்னவனும் நீயோ? இதில் வந்துள்ள உம் எனும் இடைச்சொல் தரும் பொருள் யாது?

அ) உயர்வு சிறப்புப் பொருள்

ஆ) எண்ணுப்பொருள்

இ) தனிப்பொருள்

ஈ) கருப்பொருள்

5. “சொல்லரும் சூர்பசும் பாம்பின் தோற்றம்போல் மெல்லவேகருவிருந்து...” எனும் பாடலில் பயின்று வரும் அணி எது?

அ) மொழி மாற்றுப் பொருள்கோள்

ஆ) கொண்டுகூட்டுப் பொருள்கோள்

இ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்

ஈ) விற்பூட்டுப் பொருள்கோள்

6. முகன், அகன், நலன், நிலன், பந்தர் ஆகியன

அ) முதற்போலி

ஆ) இடைப்போலி

இ) கடைப்போலி

ஈ) இலக்கணப்போலி

7. எல்லே இலக்கம் எனும் தொல்காப்பியச் சொல்லாடலை எல்லேவிளக்கம் என்று பாடங்கொண்டவர் யார்?

அ) சேனாவரையர்

ஆ) நச்சினார்க்கினியர்

இ) தெய்வச்சிலையார்

ஈ) இளம்பூரணர்

8. படிக்கவோ வந்தாய்

அ) - வினா

ஆ) சிறப்பு

இ) தெரிநிலை

ஈ) ஒழியிசை

9. திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் எது?

அ) அடக்கமுடைமை

ஆ) குறிப்பறிதல்

இ)ஈகை

ஈ) கல்வி

10. திருக்குறளில் இடம்பெறும் இரு மலர்கள் எவை

அ) எருவை, கோங்கம்

ஆ) வள்ளி, செம்மல்

இ) பீரம், ஆரம்

ஈ) அனிச்சம், குவளை

11. மிஷேல், லக்கான், பூக்கோ, தெரிதா, டெலூஸ், லியத்தார்ட்,பௌதலியார்ட் போன்றோர் முன்வைத்த கோட்பாடு

அ) அழகியல்

ஆ) இருத்தலியல்

இ) இயற்பண்பியல்

ஈ)பின்னைநவீனத்துவம்

12. மனிதன் என்கிற கருத்தாக்கம்கூட பிரதிதான் - இது யார் கருத்து?

அ) தமிழவன்

ஆ) பூக்கோ

இ) பூரணசந்திரன் .

ஈ) சசூர்

13. “அப்போதும் கடல் பார்த்துக்கொண்டே இருந்தது” எனும் நூலைஎழுதியவர் யார்?

அ) சாருநிவேதிதா

ஆ) ஜெயமோகன்

இ) எஸ்.ராமகிருஷ்ணன்

ஈ)இமையம்

14. பசுவய்யா எனும் புனைபெயரில் கவிதைகள் எழுதியவர் யார்?

அ) க.நா.சு

ஆ) வெங்கட்சாமிநாதன்

இ) யூமாவாசுகி

ஈ)சுந்தரராமசாமி

15.நினைவுப்பட்டை நீலக்கல் எனும் நாவலை எழுதியவர் யார்?

அ) ஜெயகாந்தன்

ஆ) பிரபஞ்சன்

இ) நகுலன்

ஈ)சி.சு.செல்லப்பா

16. வாமன் கதையை எழுதியவர் யார்?

அ) தத்துவபோதகர்

ஆ) ஞானப்பிரகாசர்

இ) வீரமாமுனிவர்

ஈ)சி.சு.மணி

17. குண்டலகேசி காப்பியத்திற்கு உரை கண்டவர் யார்?

அ) தெய்வச்சிலையார்

ஆ) பரிமேலழகர்

இ) மணக்குடவர்

ஈ)பொ.வே.சோமசுந்தரனார்

18. பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின் ஆண்மை திரிந்தபெயர்நிலைக் கிளவியும்... எனும் நூற்பா இடம்பெற்ற நூல் எது?

அ) நன்னூல்

ஆ) நேமிநாதம்

இ) தொல்காப்பியம்

ஈ) யாப்பருங்கலம்

19. சிறகுகள் முறியும் நேரம் கதைத்தொகுப்பின் ஆசிரியர் யார்?

அ) தமிழச்சி

ஆ) சுகிர்தராணி

இ) சல்மா

ஈ) அம்பை

20. அசோகமித்திரனின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற படைப்புஎது?

அ) முறைப்பெண்

ஆ) வாழ்விலே ஒருமுறை

இ) மானசரோவர்

ஈ) அப்பாவின் சிநேகிதர்

21. "அருமந்த கொய்யாப்பழத்தை அணில் அரித்துவிட்டது" இதில்வரும் அருமந்த என்பது...

அ) மருஉ

ஆ) போலி

இ) பண்புத்தொகை

ஈ)வினைமுற்று

22. றவ்வொடு கரவும்மை நிகழ் பல்லவுந்... எனத் தொடங்கும் நூற்பாஇடம்பெற்ற பகுதி எது?

அ) உரியியல்

ஆ) உருபியல்

இ) எச்சவியல்

ஈ) பதவியல்

23. உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் எனும் மூன்று இயல்களைக்கொண்ட நூல் எது?

அ) அவிநயனம்

ஆ) நன்னூல்

இ) இறையனார் களவியல் உரை

ஈ)யாப்பருங்கலக்காரிகை

24. சொற்களின் உள்ளமைப்பைப் பற்றி ஆராய்வது

அ) ஒலிப்பியல்

ஆ) ஒலியியல்

இ) உருபனியல்

ஈ) தொடரியல்

25. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள் எனும் நூலைஇயற்றியவர் யார்?

அ) மு.ராமசாமி

ஆ) செல்லபெருமாள்

இ) முத்தையா

ஈ) தே.லூர்து

26. காட்டுவாத்து, வழித்துணை நூலாசிரியர் யார்?

அ) ஞானக்கூத்தன்

ஆ) சி.மணி

இ) ந.பிச்சமூர்த்தி

ஈ) ஆத்மாநாம்

27. தமிழ்க் கனவு யாரைக் குறித்த நூல்?

அ) அகிலன்

ஆ) சோ.தர்மன்

இ) பேரறிஞர் அண்ணா

ஈ)சமயவேல்

28. இறந்த வீரனைப் பற்றி மற்றவர்கள் போற்றிப்பாடுவது...

அ) மறம்

ஆ) மன்னைக் காஞ்சி

இ) நிடதம்

ஈ)தொல்வேல்

29. ஐயனாரிதனார் இயற்றிய நூல் எது?

அ) முதுமொழிக்காஞ்சி

ஆ) நேமிநாதம்

இ) புறப்பொருள் வெண்பா மாலை

ஈ) அயிரை

30. நாலசைச்சீர் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ) இயற்சீர்

ஆ) ஆசியச்சீர்

இ) உரிச்சீர்

ஈ) பொதுச்சீர்

## விடைகள்

6. ஆ) தனிவினையடை
7. இ) அடுக்குப்பெயரடை
8. இ) புளியங்காய்
4. அ) உயர்வு சிறப்புப் பொருள்
5. இ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்
6. இ) கடைப்போலி
7. ஈ) இளம்பூரணர்
8. ஈ) ஒழியிசை
9. ஆ) குறிப்பறிதல்
10. ஈ) அனிச்சம், குவளை
11. ஈ) பின்னைநவீனத்துவம்
12. ஆ) பூக்கோ
13. இ) எஸ்.ராமகிருஷ்ணன்
14. ஈ) சுந்தரராமசாமி
15. இ) நகுலன் .

16. இ) வீரமாமுனிவர்

17. ஈ) பொ.வே.சோமசுந்தரனார்.

18. இ) தொல்காப்பியம்

19. ஈ) அம்பை

20. ஈ) அப்பாவின் சிநேகிதர்

21. அ) மருஉ

22. ஈ) பதவியல்

23. ஈ) யாப்பருங்கலக்காரிகை

24. இ) உருபனியல்

25. ஈ) தே.லூர்து

26. இ) ந.பிச்சமூர்த்தி

27. இ) பேரறிஞர் அண்ணா

28. ஆ) மன்னைக் காஞ்சி

29. இ) புறப்பொருள் வெண்பா மாலை

30. ஈ) பொதுச்சீர்

**விரிவாக விடையளித்தல்**

கொள்குறி வினாக்களோடு விரிவாக விடை எழுதக்கூடிய வினா வகையும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் உள்ளது.

**மொழிபெயர்ப்பு**

TNPSC Group- 1 பாடத்திட்டத்தில் மொழிபெயர்ப்புப் பகுதி உள்ளது. தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறை ஆறாம் வகுப்பு முதல் +2 வகுப்பு வரையிலான பாட நூலில் இருந்து ஆங்கிலப் பத்தி தரப்பட்டு அதன் தமிழ் மொழிபெயர்ப்பு வினாவாகக் கேட்கப்படலாம்.

தமிழ் மட்டுமல்லாமல் அனைத்து பாடங்களுக்கும் அந்நூல்களை ஒரு முறை படித்துவிட்டு எழுதுவது முக்கியம். மொழிபெயர்ப்போ,சுருக்கி வரைவோ எழுதும்போது, திருந்தாப்படி எழுதிய பின் அதைதாளில் அடித்துவிட்டுத் திருத்தியபடி எழுத வேண்டும். சில நேரங்களில் அதற்கு ஸ்டெப் மார்க் வழங்கப்படலாம். சுருக்கி எழுதும் போதும் மொழிபெயர்க்கும் போதும் தரப்பட்ட பத்தியின் கருத்து சிதையாமல் திருந்திய படியில் தர வேண்டும்.

**திருக்குறள் வினாக்கள்**

Group-1 தேர்வில் வினாத்தாளில் திருக்குறள் தொடர்பான கட்டுரை எழுதச்சொல்லிக் கேட்பதால் தரமான திருக்குறள் உரையோடு திருக்குறளைக் கற்றல் மிக முக்கியம். அன்றாட வாழ்க்கையின் சிக்கல்களுக்குத் திருக்குறள் எவ்வாறு தீர்வு தருகிறது?

மனித வாழ்வின் உயரிய மதிப்பீடுகளை உருவாக்குவதில் திருக்குறளின் பங்கு குறித்து தேர்வர்கள் தெளிவாகக் கற்றுச் செல்ல வேண்டும். சமூக, அரசியல், பொருளாதாரப் பார்வையில் திருக்குறளைக் கண்டு கட்டுரை எழுத வேண்டும். நாம் எழுதும் கட்டுரைகள் சுய சிந்தனையோடும் புதிய கருத்துகளோடும் அமைதல் அவசியம்.

திருக்குறளை அக்காலத்தின் அற இலக்கியங்களோடு ஒப்பு நோக்கி எழுதலாம். கலையும் பண்பாடும், தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தின் வளர்ச்சி, எங்கும் தமிழ் எதிலும் தமிழ், இணையத் தமிழின் இன்றைய போக்குகள், ஆட்சித் தமிழ், தத்துவார்த்தப் பார்வையில் திருக்குறள் போன்ற தலைப்புகளில் கட்டுரைகள் தயார் செய்யலாம்.

**கடிதம் எழுதுதல்**

அலுவல்சார் கடிதங்களை எழுதச் சொல்லலாம். தமிழ் வளர்ச்சித்துறை 17,161 சொற்களில் 2015 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள ஆட்சிச் சொல்லகராதியில் உள்ளவாறு துறைச் சொற்களை முறையாகப் பயன்படுத்தி எழுதுமளவு பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

## கணினி, இணையத்தின் வழித் தேர்வு

Optical Mark Reader Sheet எனும் ஆப்டிகல் குறி அங்கீகாரத்தில (ஓஎம்ஆர் அட்டையில்) பந்து முனைப் பேனா வைத்து தேர்வு எழுதிய இந்திய மாணவர்கள் இப்போது இணையத்தின் மூலம் போட்டித்தேர்வுகளை எதிர்கொள்கிறார்கள்.

ஓஎம்ஆர் அட்டையில் செய்வதைப் போல் இணைய வழித் தேர்வில் தேர்வர் இரு பதில்களை ஷேட் செய்ய இயலாது.

**நவீனத்திற்கு மாறிய போட்டித் தேர்வு அமைப்புகள்**

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எனும் ரிளஉ இணைய வழியில் தேர்வுகளை நடத்துகிறது.

இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் கூட்டு நுழைவுத் தேர்வான IIT JEE தேர்வு இப்போது இணைய வழியில் தான் நடத்தப்படுகிறது. பொறியியல் பட்டதாரி திறன் தேர்வு GATE, பொது நுழைவுத் தேர்வு CAT மற்றும் பணியாளர் தேர்வுத் துறைத் (SSC) தேர்வுகள் இப்போது இணைய வழியில்தான் நடைபெறுகின்றன.

**எவ்வாறு தயாராவது?**

கொள்குறி வினாக்களை இணைய வழியில் மிக நேர்த்தியாக எதிர்கொள்ள முடியும். அதிநவீன வேகக் கணினிகள், தடைபடாத வேகமான இணைய இணைப்பு ஆகியவற்றின் உதவியுடன் தேர்வு முகமைகள் போட்டித் தேர்வினை நடத்துகின்றன. குறிப்பிட்ட தேர்வு மையங்களின் கணினிகளை நம்பியே இணைய வழித் தேர்வுகளைத் தேர்வு முகமைகள் நடத்தவேண்டியிருப்பதால் ஒரே வினாத் தொகுப்பை நாடு முழுக்கத் தர இயலாது. வெவ்வேறு வினா தொகுப்புகளைத் தருவதால் ஒருமைத் தன்மையை நம்மால் பேண இயலாது.

**4G இணையப் புரட்சியின் விளைவு**

கொரோனா காலகட்டத்திலிருந்து மீள நமக்கு இணையம் பெரிதும் உதவியது.நாடு முழுக்க ஏற்பட்ட 4G இணையப் புரட்சியின் விளைவால் ஆன்லைன் தேர்வு முறைக்கு அனைத்து போட்டித் தேர்வு வாரியங்களும் மாறிவிட்டன. ணைய வசதி பெற்றுள்ள கணினிகளால் இது சாத்தியமாகிறது.

**கணினி, இணையத்தின் வழித் தேர்வின் சிறப்புக் கூறுகள்**

1. ஒரு வினாடி முன்பின் கூட்டிக் குறைப்பதற்கு வழியில்லாமல் துல்லியமாகத் தொடங்கி, துல்லியமாகத் தேர்வை முடிக்க முடிகிறது. தேர்வு முடிந்தவுடன் வெகு விரைவாகத் தேர்வு முடிவுகளை வெளியிட ஏதுவாய் அமைகிறது.

2. இயற்கைப் பேரிடர்களாலோ வேறு காரணங்களாலோ விடைத்தாள் சேதமாதல், காணாமல் போதல் போன்றவற்றிற்கு இம்முறையில் வழியில்லை. தலைமையகத்தில் இருந்தே தேர்வு முகமைத் தலைவர்கள் தேர்வைக் கட்டுப்படுத்த இயலும்.

3. காகிதச் செலவு, அச்சுச் செலவு போன்றவற்றிலிருந்து விலகிப்புதிய பாதை நோக்கி தேர்வர்களை இணைய வழித் தேர்வுகள்அழைத்துச் செல்கின்றன.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நவீனமாகி வெகு நாட்களாகிவிட்டன. திறமான பிராட்பேண்ட் சேவைகள் இதைச் சாத்தியமாக்கி உள்ளன.

கையால் விடை எழுதப்படும் விடைத்தாள்களைக்கூட ஸ்கேன் செய்து இணைய உதவியோடு கணினியிலேயே விடை மதிப்பீடு செய்யப்படுகிறது.

சான்றிதழ்களை இணைய வழியில் மாணவர்கள் பெற முடிகிறது. சான்றிதழின் உண்மைத் தன்மையை வேலை தரும் நிறுவனங்கள் உடனே சரிபார்க்க இயலுகிறது.

மாவட்டம், வட்டம், கிராமம் போன்ற எல்லைகளை இணையத் தேர்வு முறை எளிதாகக் கடக்க உதவியுள்ளது. எனவே, வருங்காலத்தில் போட்டித் தேர்வுகள் 100 விழுக்காடு இணைய வழியில் மட்டுமே நடப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

**நேர்காணல் தேர்வு**

அகில இந்தியப் போட்டித் தேர்வுகளில் இன்றியமையா இடம் பிடிப்பது நேர்காணல் தேர்வாகும்.

எழுத்துத் தேர்வு, தேர்வரின் அறிவாற்றலைப் பரிசோதிக்க உதவுகிறது.

பொது அறிவுத் திறனும் கட்டுரை வன்மையும் பெற்ற ஒருவர் நன்மதிப்பெண் பெற்ற பின் இறுதிக் கட்டமாக நேர்காணலுக்கு அழைக்கப்படுகிறார். அதை இப்போது, ஆளுமைத் தேர்வு என்று அழைக்கிறார்கள். ஆளுமைத் தேர்வுக்கு ஒரு தேர்வர் அழைக்கப்படுகிறார் என்றால் அவர் வெற்றி வாய்ப்பை நெருங்கிவிட்டார் என்பது பொருள்.

UPSC தேர்வின் இறுதிக் கட்டமாக நேர்காணல் தேர்வு நடக்கிறது. இந்தியக் குடிமைப் பயிற்சித் தேர்வில் நேர்காணல் எனும் ஆளுமைத் தேர்விற்கு 275 மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன.

**நேர்காணலில் கவனிக்கவேண்டியன**

அதுவரை தேர்வர் எழுதிய விடைத்தாள்களையும், அவர் பெற்ற மதிப்பெண்களையும் கொண்டே அடுத்தடுத்த நிலைகளுக்கு நகர்த்திய போட்டித் தேர்வு ஆணையம், நேர்காணலில் தேர்வரை நேரடியாகச் சந்தித்து மதிப்பீடு செய்கிறது.

**1.உடல் மொழி**

ஒருவருடைய எழுத்தின் மூலம் அவரை அறிவதற்கு இயலாது. நேரடியாக ஒருவர் முன் ஒருவர் அமர்ந்து பேசும்போது, தேர்வரின் பலம்பலவீனத்தைத் தேர்வுக் குழுவால் சரியாக மதிப்பிட முடிகிறது.இருக்கையில் எவ்வாறு அமர்ந்திருக்கிறார்? பேசும்போது கண்களைப்பார்த்துப் பேசுகிறாரா? நடுக்கம் இருக்கிறதா? மூக்கையும் நெற்றியையும் தொட்டுக்கொண்டே தேர்வர் பேசுகிறாரா? கேட்ட வினாவுக்கு நேரடியாய் பதில் சொல்லாமல் சுற்றிவளைத்துப் பேசுகிறாரா? ஆடை ஒழுங்கு உள்ளதா? நேர்த்தியான ஆடை அணிந்துள்ளாரா? தலைமுடிஒழுங்காகச் சீவப்பட்டுள்ளதா? என்று தேர்வுக் குழு நேரடியாகக் கண்டு மதிப்பீடு செய்கிறது.

## 2. நேர்மறை நோக்கு

தேர்வர்களின் தன்னறி அறிக்கையைக் கொண்டு தேர்வுக்குழு நேர்காணல் வினாக்களை எழுப்புகிறது.

எனவே, தெரியாதவற்றைத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்வது சிக்கலில் கொண்டுபோய் விடும். நூல் வாசிப்பைப் பொழுதுபோக்கு என்று தெரிவித்தால் எந்த நூல் வாசிப்பீர்கள்? அந்த எழுத்தாளரின் பிற நூல்களை வாசித்ததுண்டா என்ற கேள்விகள் எழும்.

எழுத்து என் பொழுதுபோக்கு என்று சொன்னால் இதுவரை எத்தனை நூல்கள் எழுதியுள்ளீர்கள்? எனும் வினா வரும். எனவே,தன்னறி அறிக்கை உண்மையானதாகவும் தெரிந்த தகவல்களைத் தெரிவிப்பதாகவும் அமைதல் வேண்டும்.

## 3. தர்க்கம் கூடாது

நேர்காணலில் நம் குறைகள் குழுவால் சொல்லப்பட்டால், குறைகளை வெளிப்படையாகக் குறிப்பிட்டதற்கு நன்றி. வருங்காலத்தில் நான்இவ்வாறு இல்லாமல் பார்த்துக்கொள்கிறேன் என்று நேர்மறையோடு கூற வேண்டும்.

## 4. புதுமைச் சிந்தனைகள்

ஆட்சிப் பணிக்கோ சட்டம் ஒழுங்குப் பணிக்கோ தேர்வு செய்யப்படுவோர், பிரச்சனைகளின் ஆணிவேரை நன்றாக அறிந்தவராகப் புதுமைச் சிந்தனை உள்ளவராகத் திகழ வேண்டும். அதனால் உலகப்பிரச்சனைகள் முதல் உள்ளூர்ப் பிரச்சனைகள் வரை யாவற்றையும் குறித்த தெளிவான கண்ணோட்டம் தேர்வர்களுக்கு வேண்டும். எதையும் நேர்நோக்கோடு தெளிவாகப் பார்க்கும் திறனைத் தேர்வர்கள் பெற வேண்டும்.

ஐ.பி.எஸ் பணிக்கு ஆண்களின் உயரம் 165 செ.மீ இருக்க வேண்டும் என விதி வகுக்கப்பட்டுள்ளது. மார்புச் சுற்றளவு 79 செ.மீ ஆகவும் விரிந்த நிலையில் 84 செ.மீ. ஆகவும் இருக்க வேண்டும் என விதி வகுக்கப்பட்டுள்ளது.

## 5. தனித்தன்மை

மற்றவர்களிடமிருந்து உங்களை வேறுபடுத்தும் அம்சம் எது? என்பதுதான் தனித்தன்மை என்பது. உங்கள் மன முதிர்ச்சியை உங்கள் உரையாடல் கலை மூலம் வெளிப்படுத்த வேண்டும்.

எழுத்துத் தேர்வில் நாம் நேரம் எடுக்க முடியும். ஆனால் நேர்காணலில் தாமதிக்க முடியாது. கேட்ட கேள்வியை எவ்வாறு நாம் புரிந்துகொள்கிறோம், சரியாக உள்வாங்கி அதற்கு எவ்வாறு பதில் அளிக்கிறோம் என்பதே நேர்காணலில் முக்கியம்.

ஆளுமைத் தேர்வுக்கான தனிப்பட்ட பாடத்திட்டம் ஏதுமில்லை. வானத்திற்குக் கீழே பூமிக்கு மேலே உள்ள எதைப் பற்றியும் வினாவாகக் கேட்கலாம் என்பதால் தொடர்ந்து செய்தித்தாள் வாசிப்பதும்,வாசித்ததைச் சரியாக நினைவில் வைத்து, கேட்ட கேள்விகளுக்குச் சரியான விடை தருவதும் முக்கியம்.

முகபாவங்கள் தன்னம்பிக்கையை வெளிப்படுத்துவதாய் இருக்க வேண்டும். அந்த வினாடியே ஒன்றைப் புரிந்துகொண்டு நேர்த்தியாகப் பதில் தரும் Presence of Mind மிக முக்கியம்.

**எப்போது படிப்பது?**

முதன்மைத் தேர்வு முடிந்த நாளிலிருந்தே நேர்காணலுக்குப் படிக்க வேண்டும்.

நிதி நிலை அறிக்கை, நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல், ஆளுநரின் பணிகள், உலக நாடுகளின் எல்லைப் பிரச்சனைகள், உலகப்பொருளாதாரம், உலகம் எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் சிக்கல்கள், தீர்வுகள்,பொருளாதார நெருக்கடிகள் ஆகியன குறித்த தெளிவான பார்வை இந்திய விண்வெளி ஆய்வுத் துறையின் சமீபத்தைய சாதனைகள்,வேண்டும்.

**இனிய பண்பு நலன்கள்**

பேசும் பேச்சில் உற்சாகம் இருக்க வேண்டும்.

தங்குதடையற்ற சரளமான மொழி வளம் வேண்டும். தலைமைப் பண்பை வெளிக்காட்டக்கூடிய தன்மை வேண்டும், இனிய சுபாவம் வெளிப்பட வேண்டும். ஒழுக்க மதிப்பீடுகளில் பற்றும் பாசமும் வைத்திருக்க வேண்டும்.

உணர்ச்சி வசப்படாமல் அறிவு வசப்பட்டு எதையும் அணுக வேண்டும். ஒருவரையே பார்த்துப் பேசிக்கொண்டிருக்காமல் அனைவரையும் பார்த்துப் பேச வேண்டும். உங்கள் மீது விமர்சனம் வைக்கப்படும்போது சிரித்தவாறு அதை நாசூக்காக மறுக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

நேர்காணலின் ஒரு பகுதியாகக் குழு விவாதத்திலும் தேர்வரைப் பங்கேற்கவைக்க இயலும். அதையும் தலைமைப் பண்போடு எதிர்கொண்டு அனைவரையும் ஒன்றிணைத்து குழு விவாதத்தை நெறிப்படுத்தி நடத்தலாம். நடக்கத் தயாராக இருந்தால் பாதைகள் தானே திறக்கும்.

பறக்கத் தயாராக இருந்தால் சிறகுகள் தானே முளைக்கும்.

## அகில இந்திய குடிமைப் பணிகள்

**தேர்வுப் பயிற்சி மையம்**

தமிழ்நாடு அரசின் சார்பில் அகில இந்திய குடிமைத் தேர்வுப் பயிற்சி மையம் சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் தமிழ்நாடரசால் அண்ணா மேலாண்மை நிலையம் எனும் பெயரில் நடத்தப்படுகிறது.

அண்ணா மேலாண்மை நிலையத்தில் இந்திய குடிமைப் பயிற்சித் தேர்வுக்குழுவின் முதனிலை மற்றும் முதன்மைத் தேர்வுகளுக்குச் சிறப்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

கிராமப்புற மாணவர்கள், சமூக, பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள ஏழை மாணவர்களுக்காக இப்பயிற்சி மையம் செயல்பட்டுவருகிறது.

2000 - 2019 ஆண்டுகளுக்குள் இந்நிறுவனத்தில் பயிற்சி பெற்ற747 மாணவர்கள் வெற்றி பெற்றுப் பல்வேறு பணிகளில் இணைந்துள்ளனர்.

2020-2021 ஆம் ஆண்டில் முதன்மைத் தேர்வு எழுதிய 86 தேர்வர்களில் 19 தேர்வர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதில் 8 தேர்வர்கள் தமிழை விருப்பப் பாடமாகத் தேர்வுசெய்து தேர்ச்சி பெற்றவர்கள்.

19 தேர்ச்சியாளர்களில் 9 பேர் மகளிர் என்பது இப்பயிற்சி நிலையத்தின் ஊக்குவிக்கும் திறனுக்கு நற்சான்று.

தங்கிப் பயில இடமும் நன்றாகப் படிப்பதற்கேற்ற சூழலும் ஏற்படுத்தித் தரப்பட்டது.

பயிற்சியில் உள்ள தேர்வர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.3000 கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டு மாணவர்கள் அதிகமாக இந்திய குடிமைப் பயற்சித் தேர்வுகளில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக இந்நிறுவனத்தைத் தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.

upsc தேர்வில் முந்தைய ஆண்டுகளில் கேட்கப்பட்ட பழைய வினாத்தாள்கள் இந்நிறுவனத்தின் தளத்தில் விடைகளோடு ஆவணப் படுத்தப்பட்டுள்ளன.

இரு மாதங்கள் இந்நிறுவனத்தில் தங்கிப் படிப்பதற்கான,தேர்வுகள் எழுதுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

ஆற்றல் மிக்க பேராசிரியர்கள் தினமும் வகுப்புகளை நடத்துகிறார்கள். காலமுறையிலான தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். தேர்வில் வெற்றிபெற்று முக்கியப்பொறுப்பில் உள்ள ஆளுமைகள் ஊக்கப்படுத்தும் உரைகள் வழங்குகிறார்கள்.

நவம்பர் முதல் மே வரை முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகளையும்,

ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை முக்கிய தேர்வுக்கான வகுப்புகளையும், மார்ச்சில் ஆளுமைத் திறன் பயிற்சியையும் இந்நிறுவனம் நடத்துகிறது.

முழு நேரம் மற்றும் பகுதி நேர மாணவர்களுக்கு எந்தக் கல்விக்கட்டணமும் இல்லை.

**முகவரி:**

All India Civil Services Coaching Centre,

163/1 Kanchi, P.S.Kumarasamy Raja Saalai,

R.A.Puram (Greenways Road)

Chennai 600 028

**தொலைபேசி:**

044 - 2462475, 24621909

**இணையதள முகவரி:**

www.civilservicecoaching.Com.

**மின்னஞ்சல் முகவரி**

aicscc.gov@gmail.com

**விண்ணப்பிக்க வயது வரம்பு**

இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். குறைந்தபட்ச வயது 21ம் அதிகபட்ச வயது 32ம் வகுக்கப்பட்டுள்ளது. 225 பேர் தங்கிப் பயிலவும் 100 பேர் பகுதி நேரத்தில் பயிலவும் தேர்வு செய்யப்படுகின்றனர்.

விண்ணப்பிக்கிற மாணவர்களுக்கு நவம்பர் மாதம் நடத்தப்படும் தகுதித் தேர்வு நடைபெறும். AICSCC எனும் இந்நிறுவனத்தில் மாணவர்கள் சேர்ந்து பயன் பெறலாம்.

**காணொளித் தடம்:**

Youtube.com/@aicscctn

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கணினி இணைய வழி தேர்வுஎவ்வாறுநடைபெறுகிறது? | K4 | CO1 | PO4 |
| 2 | நேர்காணலில் தனித்தன்மைகள் குறித்துவிளக்குக. | K5 | CO2 | PO5 |
| 3 | தேர்வுபயிற்சிமையம் குறித்துவிளக்குக. | K3 | CO4 | PO1 |
| 4 | நவீனத்துக்குமாறியபோட்டித்தேர்வுஅமைப்புகளை கூறு. | K5 | CO2 | PO2 |
| 5 | வினாக்கள் கேட்கப்படும் முறைகுறித்துஎழுதுக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | போட்டித் தேர்வுக்கானநேர்காணலில் கவனிக்கவேண்டியவை எவை? | K2 | CO5 | PO4 |
| 2 | கணினி இணைய வழி தேர்வின் சிறப்புக் கூறுகளைவிளக்கியுரைக்க. | K3 | CO3 | PO6 |
| 3 | வினாத்தாள் அமைப்புமுறைகளும் விடையளிக்கும் முறைகளும் கட்டுரைவரைக. | K2 | CO5 | PO5 |
| 4 | அரசுப் போட்டித்தேர்வுக்கானமாதிரிதமிழ் வினாத்தாள் ஒன்றுஅமைத்திடுக. | K5 | CO3 | PO6 |
| 5 | அகில இந்தியகுடிமைப்பணித் தேர்வுப் பயிற்சிமையம் பற்றிஎடுத்துரைக்க. | K3 | CO3 | PO3 |

**முனைவர்.ஜோ.பென்னி**

உதவிப் பேராசிரியர்,

தமிழ்த்துறை,

தெ.தி. இந்துக்கல்லூரி,

| Text Books | |
|---|---|
| 1. தமிழ் இலக்கிய வரலாறு, மு வரதராசன், சாகித்ய அகாடமி | |
| Reference Books | |
| | புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் அண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை |
| | தமிழ் இலக்கிய வரலாறு, எம்மார் அடைக்கல சாமி, சென்னை. |
| | முனைவர் ச.வே. சுப்பிரமணியன் தமிழ் இலக்கிய வரலாறு,, மணிவாசகர் பதிப்பகம், சென்னை -18. 2010. |
| | புதிய தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி 3 (நவீன இலக்கியம்) சிற்பி.பாலசுப்பிரமணியம் நீல.பத்மநாபன் (பதிப்பாசிரியர்), சாகித்திய அகாதெமி , 2013. |
| | தமிழ் இனி 2000 மாநாட்டுக் கட்டுரைகள், .பா.மதிவாணன், உ.சேரன்(ப.ஆ), காலச்சுவடு அறக்கட்டளை, நாகர் கோவில் 629001, 2007 |
| | புதுக்கவிதைவரலாறு, ராஜமார்த்தாண்டன்,, யுனைடெட்ரைட்டர்ஸ், கோபாலபுரம், சென்னை 600086, 2003 |
| | தமிழ்நாடகத்தின்தோற்றமும்வளர்ச்சியும், ஆறு. அழகப்பன் பாரிநிலையம், சென்னை 600108, 2011 |
| | பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும் , ஈசுவரபிள்ளை, தமிழ்ப் பல்கலைக்கழகம் வெள்ளி விழா ஆண்டு வெளியீடு 23 , த. தஞ்சாவூர் 613 005, 2006 |
| | பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் 1800-1900, மயிலை.சீனி.வேங்கடசாமி, பரிசல் புத்தக நிலையம், அரும்பாக்கம் சென்னை 600 106 |
| | தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம், ச.சிவகாமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாவது முதன்மைச் சாலைகுழந்தை இலக்கிய வரலாறு , பூவண்ணன் மணிவாசகர் பதிப்பகம், சென்னை 600 108, 1999 |
| | வாழ்க்கை வரலாற்று இலக்கியம், சாலினி இளந்திரையன் தமிழாய்வகம், சிதம்பரம் 608 001, 2002 |

| Related Online Contents [MOOC, SWAYAM, NPTEL, Websites etc.] |
|---|
| Web Sources |

- Tamil Heritage Foundation- www.tamilheritage.org <http://www.tamilheritage.org>
- Tamil virtual University Library- www.tamilvu.org/ library http://www.virtualvu.org/library
- Project Madurai - www.projectmadurai.org.
- Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.
- Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.
- Tamil E-Books Downloads- tamilebooksdownloads. blogspot.com
- Tamil Books on line- books.tamil cube.com
- Catalogue of the Tamil books in the Library of British Congress archive.org
- Tamil novels on line - books.tamilcube.com

| Expected Course Outcomes | | |
|---|---|---|
| இப்பாடத்தைக் கற்பதால் பின்வரும் பயன்களை மாணவர்அடைவர். | | |
| On the Successful completion of the Course,Students will be able to | | |
| CO 1 | தமிழர் வரலாற்றுச் சிறப்பினையும் தமிழ்மொழியின் பழம் பெருமையினையும் உணர்வர். | K1,K2,K4 |
| CO 2 | சங்க இலக்கியம். இலக்கியம், காப்பியம், பக்தி என்று கால வகையிலான அடிப்படையில் இலக்கிய அறிமுகம் -சங்கத்தின் சிறப்பை உணர்த்தி தெரிந்து பழகவும் வாய்ப்புள்ளது) | K1,K3,K4 |
| CO 3 | பழந்தமிழர் வாழ்வுமுறை மற்றும் பண்பாட்டுச் செய்திகளைக் குழு விவாதம் மூலம் மாணவியர் அறியச் செய்தலின் மூலம் இலக்கியங்கள் உரைக்கும் வாழ்வியலை நினைவுகூர்ந்து தற்காலத்தோடு ஒப்பிடும் ஆற்றல் பெறுவர். | K1,K2,K3 K5 |
| CO 4 | தொடர்ந்து பல்வகையான தமிழ்ச் சான்றோர் தமிழ்க்கான பங்களிப்பை செய்த நிலை அறிதல். | K1,K4,K5 |
| CO 5 | தம்முடைய வாழ்வைப் பண்படுத்தி, திறனறித் தேர்வுகளை எதிர்கொள்ளும் ஆற்றல் உடையவராதல் | K1,K2,K4 K,5,K6 |
| Remember; K2 - Undestand; K3 - Apply; K4 - Analyze; K5 - Evaluate; K6 - Create | | |

| | PO 1 | PO 2 | PO 3 | PO 4 | PO 5 | PO 6 | PO 7 | PO 8 | PO 9 | PO 10 | PSO 1 | PSO 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| CLO1 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 |
| CLO2 | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | 3 | 3 |
| CLO3 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 |
| CLO4 | 3 | 3 | 3 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | 3 | 3 |
| CLO5 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 |